# 1

# பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

## 1.1 பொதுநோக்கு

**இலங்கை பொருளாதாரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சவால்களுக்கு மத்தியில் 2014இல் அதன் தாக்குப்பிடிக்கும் தன்மையைக் காட்டியிருந்தது.** 2014இல் உண்மை மொ.உ.உற்பத்தி 2013இன் 7.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன்படி, தலைக்குரிய மொ.உ.உற்பத்தி முன்னைய ஆண்டின் ஐ.அ.டொலர் 3,280 இலிருந்து 2014இல் ஐ.அ.டொலர் 3,625 இற்கு அதிகரித்தது. பொருளாதாரம், கூட்டுக் கேள்வியின் பெரும் பங்கினை உள்ளடக்கியிருக்கும் உள்நாட்டு நுகர்வுச் செலவினத்தினால் தூண்டப்பட்ட வேளையில், குறிப்பாக, கட்டடவாக்கத்தின் மீதான முதலீடுகள் இவ்வாண்டுப் பகுதியில் பொருளாதார விரிவாக்கத்திற்கு தூண்டுதலொன்றினை வழங்கின. இவ்வாண்டுப் பகுதியில் உற்பத்திப் பக்கத்தில் கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகள் தொடர்ந்தும் சிறந்த செயலாற்றத்தினைக் கொண்டிருந்த வேளையில் மோசமான வானிலை நிலைமைகள் வேளாண்மைத் துறையின் செயலாற்றத்தினை தளர்வுறச் செய்தன. ஆண்டிற்கு ஆண்டு மற்றும் ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 2013 இறுதியின் முறையே 4.7 சதவீதத்திலும் 6.9 சதவீதத்திலுமிருந்து 2014 இறுதியில் முறையே 2.1 சதவீதத்திற்கும் 3.3 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக பணவீக்கம் ஆறாவது ஆண்டாக ஒற்றை இலக்க மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது. முன்மதியுடைய நாணயக் கொள்கை அதேபோன்று ஆண்டின் பின்னரைப் பகுதியில் உலகளாவிய பண்ட விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி என்பன இவ்வாண்டுப் பகுதியில் பணவீக்கம் தாழ்ந்த ஒற்றை இலக்க மட்டத்திற்கு குறைவடைவதனை இயலச்செய்தன. ஒப்பீட்டு ரீதியில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைமைக்கிடையிலும் தாழ்ந்த பன்னாட்டு தங்க விலைகளின் விளைவாக வீழ்ச்சியடைந்த அடகுபிடித்தல் முற்பணங்களின் தாக்கம் குறிப்பாக ஆண்டின் முதல் ஏழு மாத காலப்பகுதியில் தனியார் துறையினால் பெறப்பட்ட கொடுகடனின் அதிகரிப்பினைக் குறைத்திருக்கிறது. பணவீக்கத்தின் மீது கேள்வி அழுத்தங்கள் காணப்படாமையினால் வங்கிகளின் கடன் பகிர்ந்தளிப்புக்களை மேலும் வசதிப்படுத்தும் விதத்தில் மத்திய வங்கி வழிமுறைகளை மேற்கொண்டது. எனினும், இவ்வழிமுறைகள் தளம்பலுற்ற உலகளாவிய நிலைமைகளுடன் சேர்ந்து சில சொத்துப்பட்டியல் முதலீட்டு வெளிப்பாய்ச்சல்களுக்குக் காரணமாகியதுடன் இறக்குமதிகளை ஊக்குவித்து ஆண்டின் இறுதிப்பகுதியில் வெளிநாட்டு துறையின் மீதும் செலாவணி வீதங்களின் மீதும் அழுத்தங்களை அதிகரித்தது. பொதுவாக இவ்வாண்டுப் பகுதியில் பெயரளவு நியதிகளில் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்த போதும் பணிகளிலுள்ள வர்த்தகம் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான உட்பாய்ச்சல்களின் ஆதரவுடன் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை குறைவடைந்தது. இது, மற்றைய நிதியியல் உட்பாய்ச்சல்களுடன் சேர்ந்து சென்மதி நிலுவையும் அதன் மூலம் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் வலுவடைய உதவியது. பணவனுப்பல்கள் வடிவில் வெளிநாட்டிலுள்ள தொழிற்படைகளிடமிருந்தான நிதிகளின் தொடர்ச்சியான உட்பாய்ச்சல் மற்றும் முதலீட்டு உதவிகளுடன் தேசிய சேமிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன சேமிப்பு முதலீட்டு

**அட்டவணை 1.1** பேரண்டப் பொருளாதார செயலாற்றம் (2010 - 2014)

| குறிகாட்டி | அலகு | 2010 | 2011 | 2012 | 2013(அ) | 2014(ஆ) |
|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறையும் பணவீக்கமும்** | | | | | | |
| உண்மை மொ.உ.உ வளர்ச்சி | % | 8 | 8.2 | 6.3 | 7.2 | 7.4 |
| சந்தை விலைகளில் மொ.உ.உ | ரூ.பில் | 5,604 | 6,543 | 7,579 | 8,674 | 9,785 |
| தலைக்குரிய மொ.உ.உ | ஐ.அ.டொ | 2,397 | 2,836 | 2,922 | 3,280 | 3,625 |
| ஆண்டுக்கான சராசரி பணவீக்கம் | % | 6.2 | 6.7 | 7.6 | 6.9 | 3.3 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | |
| வர்த்தக நிலுவை | மொ.உ.உ.இன் % | -9.7 | -16.4 | -15.9 | -11.3 | -11.1 |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ.இன் % | -2.2 | -7.8 | -6.7 | -3.8 | -2.7 |
| திரண்ட நிலுவை | ஐ.அ.டொ.மில் | 921 | -1,059 | 151 | 985 | 1,369 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | ஐ.அ.டொ.மில் | 7,196 | 6,749 | 7,106 | 7,495 | 8,208 |
| **இறைத்துறை** | | | | | | |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ.இன் % | -2.1 | -1.1 | -1.0 | -0.8 | -1.3 |
| திரண்ட நிலுவை | மொ.உ.உ.இன் % | -8.0 | -6.9 | -6.5 | -5.9 | -6.0 |
| அரச படுகடன் | மொ.உ.உ.இன் % | 81.9 | 78.5 | 79.2 | 78.3 | 75.5 |
| நிதியியல் துறை (இ) | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி | % | 15.8 | 19.1 | 17.6 | 16.7 | 13.4 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ($M_2b$) | % | 24.9 | 34.5 | 17.6 | 7.5 | 8.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) ஆண்டு இறுதிப் பெறுமதிகளின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

இடைவெளியினைக் குறைக்க உதவின. அதேவேளை, இறைத் துறையில், இறைத் திரட்சியை நோக்கிய அரசாங்கத்தின் கடப்பாடுகள் அறிவிக்கப்பட்டபோதும் ஒட்டுமொத்த இறைப் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் மொ.உ.ற்பத்தியின் 5.9 சதவீதத்திலிருந்து 2014இல் மொ.உ.உற்பத்தியின் 6.0 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு அரசிறைச் சேகரிப்பில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாக அமைந்தது. இருப்பினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரசாங்கத்தின் படுகடன் 2013 இறுதியின் 78.3 சதவீதத்திலிருந்து 2014 இறுதியில் 75.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. நிதியியல் துறையில் வலுவாக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பு, மேம்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ இயலாற்றல்கள் மற்றும் இடர்நேர்வினைத் தணிப்பதற்கான போதுமான தாங்கிருப்புக்கள் இவ்வாண்டுப் பகுதியில் நிதியியல் நிறுவனங்கள் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையுடன் விளங்குவதனை இயலச்செய்தன.

**முன்னோக்கிப் பார்க்கையில் இலங்கையின் பொருளாதாரம் உயர் நடுத்தர வருமான மட்டங்களை அடையுமெனவும் பொருத்தமான பொருளாதாரக் கொள்கைளின் உதவியுடன் நடுத்தர காலத்தில் சாதகமான உயர் வளர்ச்சியும் தாழ்ந்த பணவீக்கமும் நீடித்திருக்கும் எனவும் எறிவு செய்யப்பட்டது.** புதிய அரசாங்கம் சிறந்த ஆளுகை மற்றும் வெளிப்படையான தன்மைகள் தொடர்பான கொள்கைகளை பின்பற்றுமென எதிர்பார்க்கப்படுவதனால் இது மேம்பட்ட முதலீட்டாளர் நட்புறவான சூழ்நிலையினூடாக உயர் வளர்ச்சிப் பாதைக்கு ஆதரவளிக்கும். அரசாங்கம் ஒத்திசைவான நடுத்தர காலக் கொள்கை கட்டமைப்பொன்றினை தெளிவுபடுத்துகின்ற அநேக பணிகளை மேற்கொள்வதுடன் சாதகமான தாக்கங்களை மேம்படுத்தியதுடன் முன்னர் அறிவிக்கப்பட்ட கொள்கைகளின் சாத்தியமான குறைபாடுகளையும் அதேபோன்று எதிர்நோக்குகின்ற சவால்களையும் கட்டுப்படுத்தும். அவசர தேவைகளைக் கொண்ட கவனத்தை ஈர்க்கும் முக்கிய சவால்களாக சிறந்த இறை சமநிலையை எய்தும் பொருட்டு மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச அரசிறையில் தொடர்ச்சியாக ஏற்படும் வீழ்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கான அவசர தேவைகளாக; அரச துறை உட்பட பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளினதும் அதிகரித்துவரும் உற்பத்தித்திறன்; படுகடனை உருவாக்காத மூலங்களினூடாக, குறிப்பாக, வெளிநாட்டு நேரடி முதலீடுகளினூடாக வலுவான வளர்ச்சிக்குத் தேவையான மூலவளங்களைத் திரட்டுதல்; பொதுவசதிகளுக்கான பயன்பாட்டிற்காக பொருத்தமான விலையிடல் கொள்கைகளை அபிவிருத்தி செய்தல்; சமூக பாதுகாப்பு வலையமைப்பினையும் உதவுதொகைத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துகையில் பயனாளிகளை சரியான முறையில் இனங்காணுதல்; நலம் மற்றும் கல்வி பணிகளை வழங்குவதில் சமத்துவத்தையும் தரத்தினையம் மேம்படுத்தல்; அரச போக்குவரத்துக்களின் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்தல்; வலுவான அடிப்படையில் பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்தியைத் தொடர்தல்; தொழிலாளர் உற்பத்திறனை மேம்படுத்துவது உட்பட வயது முதிர்ந்த குடித்தொகையின் சவால்களைக் கட்டுப்படுத்துவதற்கு கொள்கைகளை வடிவமைத்தல் மற்றும் ஓய்வூதிய நிதியம் மற்றும் காப்புறுதிச் சாதனங்களின் அபிவிருத்தியை மேம்படுத்துதல்; மற்றும் வியாபாரம் செய்தல் சூழ்நிலையினையும் கொள்கை ஊகத்தன்மையினையும் மேம்படுத்துதல்


என்பன காணப்படுகின்றன. அத்தகைய சவால்களைக் கட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டவாறு எறிவு செய்யப்பட்ட வளர்ச்சிப் பாதையை அடைவது இன்றியமையாததாக இருக்குமென்பதுடன் பொருளாதாரம் அதன் முழு உள்ளார்ந்த வளத்தினையும் பயன்படுத்துவதனை இயலச்செய்யும் அதேவேளையில் மிகச் சாதகமான சூழ்நிலையொன்றில் பேரண்டப் பொருளாதாரத்தின் உறுதிப்பாடும் பேணப்படும்.

## 1.2 பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள், உறுதிப்பாடு மற்றும் கொள்கை பதிலிறுப்புகள் - 2014

### உண்மைத் துறை அபிவிருத்திகள் மற்றும் பணவீக்கம்

**இலங்கையின் பொருளாதாரம் 2013இன் 7.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 7.4 சதவீதம் கொண்ட உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சியை எய்தியது.** உலகளாவிய பொருளாதாரத்திலான பன்முக அபிவிருத்திகளுக்கு மத்தியிலும் தொடர்ந்த உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளிலான வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு உதவின. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் மற்றும் வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து துணைத் துறைகளிலான குறிப்பிடத்தக்க பங்களிப்புடன் மொ.உ.உற்பத்தியில் 57.6 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிகள் துறை 2013இன் 6.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 6.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. மொ.உ.உற்பத்தியினுள் கைத்தொழில் துறையின் பங்கு முன்னைய ஆண்டின் 9.9 சதவீதமான துறை ரீதியான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 11.4 சதவீதமான துறை ரீதியான வளர்ச்சியுடன் 32.3

**வரைபடம் 1.1 காலாண்டுக்கான உண்மை மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சி**




சதவீதத்திற்கு மேலும் அதிகரித்தது. கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்கு கட்டடவாக்கத் துணைத் துறை உயர்ந்தளவு பங்களிப்பைப் பதிவு செய்த அதேவேளையில், தொழிற்சாலைக் கைத்தொழிலுக்கான உணவு, குடிபானம், புகையிலை மற்றும் புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள் துணைத் துறைகளும் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கின. அதேவேளை, மோசமான வானிலை நிலைமைகளினால் பாதிக்கப்பட்டு, மொ.உ.உற்பத்தியில் 10.1 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வேளாண்மைத் துறை உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சிக்கு சிறிதளவு மட்டுமே பங்களித்தது. வேளாண்மைத் துறையின் வளர்ச்சி முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 0.3 சதவீதமாக இருந்தது.

**முதலீடு மற்றும் நுகர்வு நடவடிக்கைகள் இரண்டிலும் ஏற்பட்ட விரிவாக்கம் 2014இல் மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சிக்கு உதவியாக அமைந்தது.** செலவின அணுகுமுறையின்படி, முதலீட்டுச் செலவினம் அதிகரித்தமைக்கு தனியார் மற்றும் அரச துறை இரண்டினதும் முதலீடுகளே காரணமாக இருந்தன. தனியார் நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு தாழ்ந்த உள்நாட்டு வட்டி வீதங்களும் உயர்ந்த செலவிடத்தக்க வருமானங்களும் பக்கபலமாக அமைந்தன. இதன் விளைவாக, நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. எனினும், ஏற்றுமதிகளுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகளின் வளர்ச்சியிலிருந்த உயர்ந்த பங்களிப்பானது ஆண்டுக் காலத்தில் பெயரளவு நியதிகளில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி சிறிதளவால் தேய்வடைவதற்கு வழிவகுத்தது.

**உள்நாட்டுச் சேமிப்புக்கள் முன்னைய ஆண்டின் 20.0 சதவீதத்திலிருந்து 2014இல் மொ.உ.உற்பத்தியின் 21.1 சதவீதத்திற்கு மேம்பட்டது.** இவ்வாண்டுப் பகுதியில் உள்நாட்டுச் சேமிப்புக்களில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கு அரசின் குறைச் சேமிப்புக்கள் அதிகரித்தமைக்கிடையிலும் தனியார் சேமிப்புக்கள் தொடர்ச்சியாக விரிவடைந்தமையே காரணமாகும். மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்கள் 27.0 சதவீதத்திற்கு மேம்பட்டமைக்கு, தொழிலாளர் பணவனுப்பல்கள் வடிவில் காணப்பட்ட தொடர்ச்சியான உட்பாய்ச்சல்களினதும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தின் எதிர்மறையான வளர்ச்சி குறைவடைந்தமையினதும் இணைந்த விளைவே காரணமாகும். இவ்வபிவிருத்திகள், சேமிப்பு - முதலீட்டு இடைவெளி 2013இன் மொ.உ.உற்பத்தியின் 3.7 சதவீதத்திலிருந்து 2014இல் மொ.உ.உற்பத்தியின் 2.7 சதவீதத்திற்கு குறுக்கமடையப் பங்களித்தது.

**அட்டவணை 1.2**

**நடைமுறை சந்தை விலைகளில் கூட்டுக் கேள்வியும் சேமிப்பு முதலீட்டு இடைவெளியும்**

| விடயம் | ரூ. பில்லியன் | | வளர்ச்சி % | | மொ.உ.உ. இன் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2013(அ) | 2014(ஆ) | 2013(அ) | 2014(ஆ) | 2013(அ) | 2014(ஆ) |
| **1. உள்நாட்டுக் கேள்வி** | **9,500.8** | **10,621.2** | **10.3** | **11.8** | **109.5** | **108.5** |
| 1.1 நுகர்வு | 6,940.6 | 7,716.2 | 10.2 | 11.2 | 80.0 | 78.9 |
| தனியார் | 5,803.3 | 6,398.3 | 10.0 | 10.3 | 66.9 | 65.4 |
| அரசு | 1,137.3 | 1,317.8 | 11.3 | 15.9 | 13.1 | 13.5 |
| 1.2 முதலீடு (மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்) | 2,560.2 | 2,905.0 | 10.4 | 13.5 | 29.5 | 29.7 |
| தனியார் | 1,965.0 | 2,236.8 | 9.5 | 13.8 | 22.7 | 22.9 |
| அரசு | 595.2 | 668.1 | 13.7 | 12.3 | 6.9 | 6.8 |
| **2. தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-826.6** | **-836.5** | **20.2** | **-1.2** | **-9.5** | **-8.5** |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 1,949.2 | 2,185.0 | 12.6 | 12.1 | 22.5 | 22.3 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 2,775.7 | 3,021.5 | 0.3 | 8.9 | 32.0 | 30.9 |
| **3. மொத்தக் கேள்வி (மொ.உ.உ.) (1 + 2)** | **8,674.2** | **9,784.7** | **14.5** | **12.8** | **100.0** | **100.0** |
| **4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் (3 - 1.1)** | **1,733.7** | **2,068.5** | **35.2** | **19.3** | **20.0** | **21.1** |
| தனியார் | 1,801.4 | 2,196.2 | 32.2 | 21.9 | 20.8 | 22.4 |
| அரசு | -67.7 | -127.7 | 14.9 | -88.5 | -0.8 | -1.3 |
| **5. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம்** | **-226.1** | **-240.1** | **-46.0** | **-6.2** | **-2.6** | **-2.5** |
| **6. தேறிய தனியார் நடைமுறை மாற்றல்கள்** | **728.7** | **813.1** | **5.8** | **11.6** | **8.4** | **8.3** |
| **7. தேசிய சேமிப்புக்கள் (4 + 5 + 6)** | **2,236.3** | **2,641.6** | **23.1** | **18.1** | **25.8** | **27.0** |
| **8. சேமிப்பு முதலீட்டு இடைவெளி** | | | | | | |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீடு (4 - 1.2) | -826.6 | -836.5 | | | -9.5 | -8.5 |
| தேசிய சேமிப்புக்கள் - முதலீடு (7 - 1.2) | -324.0 | -263.4 | | | -3.7 | -2.7 |
| **9. வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு நிலுவை (2 + 5 + 6)** | **-324.0** | **-263.4** | | | **-3.7** | **-2.7** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது


மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**2014இல் வேளாண்மைத் துறை 0.3 சதவீதத்தினால் சிறிதளவால் வளர்ச்சியடைந்தமையின் காரணமாக மொ.உ.உற்பத்தியில் அதன் பங்கு 2013இன் 10.8 சதவீதத்திலிருந்து 10.1 சதவீதத்திற்கு குறைவடைந்தது.** மோசமான வானிலை நிலைமைகளின் தாக்கம் காரணமாக நெல் (16.7 சதவீதம்), இறப்பர் (32.3 சதவீதம்) மற்றும் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் (15.0 சதவீதம்) என்பன உள்ளிட்ட பல முக்கிய துணைத் துறைகளின் சுருக்கம் வேளாண்மைத் துறையின் வளர்ச்சி வீழ்ச்சியடையப் பங்களித்தது. சிறுபோகம் மற்றும் பெரும்போகம் ஆகிய இரு போகங்களிலும் நெல் உற்பத்தி குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. இறப்பர் உற்பத்தி தொடர்ந்து மூன்றாவதாண்டாக வீழ்ச்சியடைந்தமைக்கு இயற்கை இறப்பருக்கான பன்னாட்டுக் கேள்வி நலிவடைந்தமையும் அதேபோன்று வானிலை நிலைமைகளும் காரணங்களாக அமைந்தன. எனினும், பல முக்கிய துணைத் துறைகளின் வெளியீட்டில் காணப்பட்ட சுருக்கத்தின் தாக்கத்தினை தெங்கு மற்றும் ஏனைய உணவுப் பயிர்கள் துணைத் துறைகளில் காணப்பட்ட ஆரோக்கியமான செயலாற்றம் எதிரீடு செய்தது. தெங்குத் துணைத் துறை 2014இல் முன்னைய ஆண்டில் காணப்பட்ட 16.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கெதிராக உற்பத்தியில் 7.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. ஏனைய உணவுப் பயிர்களின் உற்பத்தி முன்னைய ஆண்டின் 4.3 சதவீதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 7.0 சதவீதத்தினால் அதிகரித்தது. நெற் செய்கை நிலங்கள் ஏனைய உணவுப் பயிர்களின் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டமையும் உள்ளூர் வேளாண்மையாளர்களைப் பாதுகாப்பதனை இலக்காகக் கொண்ட அரசாங்கத்தின் கொள்கைகளும் உள்நாட்டு உற்பத்திகள் அதிகரிக்க உதவின. அதேவேளை, தேயிலை உற்பத்தி 2013இன் முன்னெப்பொழுதுமில்லாத மிக உயர்ந்த உற்பத்தியிலிருந்து 2014இல் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தபோதும் அதிகரித்த தேயிலை விலைகளின் ஆதரவுடன் சிறந்த செயலாற்றத்தினைக் காட்டியது.

**வேளாண்மைத் துறையின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்குமாக அரசாங்கம் 2014இல் பல கொள்கை வழிமுறைகளை மேற்கொண்டது.**

**வரைபடம் 1.2**

**சேமிப்பும் முதலீடும் (மொ.உ.உ. இன் சதவீதமாக)**



அட்டவணை 1.3 **நிலையான விலைகளில் (2002) கைத்தொழில் மூலத்தின்படி மொத்தத் தேசிய உற்பத்தி**

| துறை | பெறுமதி (ரூ. மில்லியன்) | | மொ.உ.உ. இன் பங்கு (%) | | மாற்றத்தின் வீதம் (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2013(அ) | 2014(ஆ) | 2013(அ) | 2014(ஆ) | 2013(அ) | 2014(ஆ) | 2013(அ) | 2014(ஆ) |
| **வேளாண்மை** | **352,583** | **353,799** | **10.8** | **10.1** | **4.7** | **0.3** | **7.1** | **0.5** |
| வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் காட்டுத்தொழில் | 309,134 | 308,403 | 9.5 | 8.8 | 4.5 | -0.2 | 6.0 | -0.3 |
| மீன்பிடித் தொழில் | 43,449 | 45,397 | 1.3 | 1.3 | 6.2 | 4.5 | 1.2 | 0.8 |
| **கைத்தொழில்** | **1,016,886** | **1,132,892** | **31.1** | **32.3** | **9.9** | **11.4** | **41.6** | **48.2** |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 94,388 | 104,767 | 2.9 | 3.0 | 11.5 | 11.0 | 4.4 | 4.3 |
| தயாரிப்பு | 559,843 | 604,677 | 17.1 | 17.2 | 7.5 | 8.0 | 17.6 | 18.6 |
| மின்வலு, எரிவாயு மற்றும் நீர் | 79,913 | 83,542 | 2.4 | 2.4 | 10.3 | 4.5 | 3.4 | 1.5 |
| கட்டடவாக்கம் | 282,742 | 339,906 | 8.7 | 9.7 | 14.4 | 20.2 | 16.1 | 23.8 |
| **பணிகள்** | **1,896,572** | **2,019,973** | **58.1** | **57.6** | **6.4** | **6.5** | **51.3** | **51.3** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 739,826 | 798,837 | 22.7 | 22.8 | 5.5 | 8.0 | 17.4 | 24.5 |
| சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும் | 25,715 | 28,676 | 0.8 | 0.8 | 22.3 | 11.5 | 2.1 | 1.2 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் | 476,721 | 511,296 | 14.6 | 14.6 | 9.4 | 7.3 | 18.5 | 14.4 |
| வங்கியியல், காப்புறுதி, உண்மைச் சொத்து மற்றும் ஏனையவை | 285,750 | 304,478 | 8.7 | 8.7 | 5.9 | 6.6 | 7.3 | 7.8 |
| வதிவிட உரிமை | 79,175 | 80,178 | 2.4 | 2.3 | 2.9 | 1.3 | 1.0 | 0.4 |
| அரச பணிகள் | 213,439 | 216,477 | 6.5 | 6.2 | 2.8 | 1.4 | 2.7 | 1.3 |
| தனியார் பணிகள் | 75,946 | 80,030 | 2.3 | 2.3 | 7.3 | 5.4 | 2.3 | 1.7 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **3,266,041** | **3,506,664** | **100.0** | **100.0** | **7.2** | **7.4** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -85,127 | -86,035 | | | -36.8 | -1.1 | | |
| **மொத்த தேசிய உற்பத்தி** | **3,180,915** | **3,420,629** | | | **6.6** | **7.5** | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தேயிலை மற்றும் இறப்பர் தொழில் துறைகளில் மீள்பயிரிடுகை மற்றும் புதிய பயிரிடுகை என்பனவற்றை ஊக்குவிப்பதற்காக உதவுதொகை நிகழ்ச்சித்திட்டம் 2014இலும் தொடர்ந்தது. தேயிலைத் துறையில், தொழிற்சாலையை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்ததுடன் உற்பத்தியாக்கத்தினையும் சிறந்த தயாரிப்பு நடைமுறைகளையும் மேம்படுத்தும் நோக்குடன் தேயிலை கொய்வதற்கான பொறிமுறையினைப் பிரபல்யப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும், விலங்கு வளர்ப்பு முதன்மைத் திட்டத்தின் கீழ் பல அரச நிறுவனங்களினால் தொடங்கப்பட்ட செயற்றிட்டங்கள் 2014இலும் தொடர்ந்தன. ஆழ்கடல் மீன்பிடிக்கு வசதியளிக்கும் விதத்தில் தேசிய மீன்பிடி படகுத் தொகுதிகளை வலுப்படுத்தவும் மீன்பிடித் துறைமுகங்களையும் நங்கூரம் பாய்ச்சல் இடங்களையும் நிருமாணித்து தரமுயர்த்துவதற்காகவும் பல வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டன. அதேவேளை, உத்தரவாதப்படுத்தப்பட்ட நெல் கொள்வனவுத் திட்டத்தின் கீழ் நெல்லின் கொள்வனவு விலைகள் அதிகரிக்கப்பட்டமை, உருளைக்கிழங்கு, தேயிலை மற்றும் உடன்பால் என்பனவற்றின் உற்பத்தியாளர் விலைகளில் செய்யப்பட்ட அதிகரிப்பு அதேபோன்று உள்நாட்டு வேளாண்மையை ஊக்குவிப்பதற்காக இறப்பருக்கான குறைந்தபட்ச உத்தரவாத விலை அறிமுகப்படுத்தப்பட்டமை உட்பட 2015இற்கான இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் பல கொள்கை வழிமுறைகள் முன்மொழியப்பட்டிருந்தன. அத்துடன் வர்த்தக வங்கிகளினால் வேளாண்மையாளர்களுக்கு கடந்த காலத்தில் வழங்கப்பட்டு செலுத்தப்படாதிருக்கும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு ரூ.100,000 கொண்ட உயர்ந்தபட்சக் கடன் தளர்த்தல் என்ற நிபந்தனைக்குட்பட்டு 50 சதவீதத் தளர்த்தல்கள் வழங்கப்பட்டன.

**தயாரிப்பு மற்றும் கட்டடவாக்க நடவடிக்கையில் ஏற்பட்ட உதைமானத்துடன், கைத்தொழில்துறை அதன் வளர்ச்சி உத்வேகத்தினை 11.4 சதவீதத்திற்கு விரைவுபடுத்தி தேசிய உற்பத்தியில் அதன் பங்கினை 2014இல் 32.3 சதவீதத்திற்கு உயர்த்திக் கொண்டது.** கைத்தொழில் துறையின் கூட்டப்பட்ட பெறுமதியில் 53.4 சதவீதத்திற்கு வகைகூறும் தயாரிப்புத் துணைத் துறை 2014இல் 8.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. தயாரிப்புத் துறையின் பெரும் பங்கினை உள்ளடக்கிய தொழிற்சாலைக் கைத்தொழில்கள், தூண்டுதலளிக்கும் உள்நாட்டுப் பேரண்டப் பொருளாதாரச் சூழலுடன் மேம்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கேள்வியும் சேர்ந்து கொண்டதன் காரணமாக 2014இல் 8.5 சதவீதத்தினால் வளர்ச்சியுற்றது. ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் தொழிற்சாலைக் கைத்தொழிலின் வெளியீட்டில் ஏற்பட்ட வளர்ச்சிக்குத் தொடர்ந்தும் முக்கிய பங்களிப்பாளர்களாக விளங்கின. அணியும் ஆடைகள் 2014இல் 13.2 சதவீதமான வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு இலங்கை அதன் பிராந்திய போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் நம்பகமானதும் உயர்தரமானதுமான ஆடைத் தயாரிப்பாளர் என்ற பன்னாட்டு ரீதியான கீர்த்தியை பெற்றுக் கொண்டமையின் பயனே காரணமாகும். இயற்கை இறப்பரின் குறைந்த உள்நாட்டு உற்பத்திக்கிடையிலும் 7.1 சதவீதத்தினால் அதிகரித்த இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் துணைத் துறை அதன் வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணியமைக்கு இவ்வாண்டுப் பகுதியில் இறப்பர் உற்பத்தி ஏற்றுமதிகளின் தயாரிப்பிற்கான உள்ளீடாக பயன்படுத்தப்பட்ட இறப்பர் மூலப்பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பே

வசதியளித்தது. இவ்வளர்ச்சியானது இறப்பர் ரயர், டியூப்புக்கள் மற்றும் மற்றைய இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளுக்கான வெளிநாட்டுக் கேள்வியினால் மேலும் ஆதரவளிக்கப்பட்டது. அதேவேளை, தாழ்ந்த பணவீக்கத்தின் உதவியுடன் தொடர்ச்சியாகக் காணப்பட்ட தாழ்ந்த வட்டி வீதச் சூழல் உள்நாட்டுக் கேள்வியைத் தூண்டி 2014இல் உள்நாட்டுச் சந்தை சார்ந்த கைத்தொழில்களின் வெளியீட்டினை உத்வேகப்படுத்தியது. இதற்கமைய, இவ்வாண்டுப் பகுதியில் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை துணைத் துறை 8.1 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வளர்ச்சியானது பொழுதுபோக்குக் கைத்தொழிலான அதிகரித்த செயலாற்றத்தின் மூலம் மேலும் ஆதரவளிக்கப்பட்டது. அதேவேளை, கட்டடவாக்கத் துறை 20.2 சதவீத வளர்ச்சியுடன் பொருளாதாரத்தினை முன்னோக்கிச் செலுத்துவதில் வீரியம் மிக்க வகிபாகமொன்றினைத் தொடர்ந்தும் ஆற்றி 2014இல் வளர்ச்சிக்கு ஏறத்தாழ 24 சதவீதம் பங்களித்தது. கட்டடவாக்கத் துறையின் வளர்ச்சிக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள், வீடமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் ஏற்பட்ட அரச முதலீடுகள் அதேபோன்று பாரியளவு தனியார் கட்டடவாக்க நடவடிக்கைகள் என்பன பக்கபலமாக விளங்கின. சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துணைத் துறையும் கட்டடவாக்க நடவடிக்கைகளின் விரிவாக்கத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக் கொண்டது.

**அரசாங்கமானது இறைச் சலுகைகள், தொழில்நுட்ப உதவிகள் அதேபோன்று பிராந்திய கைத்தொழில் மயமாக்கலை மேம்படுத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை தரமுயர்த்துதல் என்பனவற்றை வழங்குவதன் மூலம் கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்காக ஊக்குவிப்புக்களைத் தொடர்ந்தும் வழங்கியது.** இறைச் சலுகைகள் உள்ளூர் பெறுமதிகூட்டல்களை ஊக்குவிப்பதனையும் வலுச் சேமிப்பு மற்றும் பசுமை தயாரிப்பு முறைகளை உச்சப்படுத்துவதனையும் முக்கிய நோக்காகக் கொண்டிருந்தன. அதேவேளை, கைத்தொழில் பேட்டைகளை உருவாக்குவது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழ் தொடர்ந்தும் இடம்பெற்று வந்த வேளையில் தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வியாபார அபிவிருத்திப் பணிகளை வழங்குவதற்காக மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. மேலும், லேட்டெக்ஸ் கையுறை, வேளாண் உற்பத்திகள், வாசனைத் திரவியங்கள் மற்றும் ஏனைய ஏற்றுமதி உற்பத்திகள் போன்ற கைத்தொழில் உற்பத்திகளுக்காக தொற்றுநீக்கல் வசதிகளை வழங்குவதற்காக இலங்கை ஹாமா நிலையம் போன்றவற்றை உருவாக்குவதற்காக அரசாங்கம் தொழில்நுட்ப முன்னெடுப்புக்களை அறிமுகப்படுத்தியது. கட்டடவாக்கம், பார பொறித் தொகுதிகள் மற்றும் கப்பல் கட்டல் போன்ற கைத்தொழில்களில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்துதலை வழங்குவதற்காக சிறந்த சாதனங்களுடன் கூடிய பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளத்தக்க பரீட்சிப்பு ஆய்வுகூடங்களுடன் கூடிய தேசிய அழிவிற்கெதிரான பரீட்சிப்பு நிலையமொன்று 2014இல் ஏற்படுத்தப்பட்டது. அதேவேளை கைத்தொழில்களுக்கு வசதியளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவகம் இவ்வாண்டுப் பகுதியில் தொழில்நுட்பவியல் பாதுகாப்பு நிலையத்தின் கட்டுமான வேலைகளைத் தொடங்கியது. எனினும், நீண்ட காலத்தில் கைத்தொழில் வளர்ச்சி உத்வேகத்தினை வலுப்படுத்துவதற்காக மின்னியல், இலத்திரனியல் மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் போன்ற உயர் பெறுமதிகூட்டப்பட்ட கைத்தொழில்களுக்கான உள்ளார்ந்த வளங்கள் மேலும் கண்டறியப்பட வேண்டிய தேவை காணப்படுகிறது.


**மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக துணைத் துறையின் செயலாற்றத்தின் பக்கபலத்துடன், பணிகள் துறை 2014இல் 6.5 சதவீதத்தினால் விரிவடைந்து மொ.உ.உற்பத்தியின் கூட்டப்பட்ட பெறுமதியின் 57.6 சதவீதமான பங்கிற்கு வகைகூறியது.** மொ.உ.உற்பத்தியின் 22.8 சதவீதத்திற்கு வகைகூறும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக துணைத் துறை அதன் வளர்ச்சி வீதத்தினை முன்னைய ஆண்டின் 5.5 சதவீதத்திலிருந்து 2014இல் 8.0 சதவீதத்திற்கு விரைவுபடுத்திக் கொண்டது. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்திற்குள், உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகள் குறைந்த வட்டி வீதங்கள், உயர்ந்த உள்நாட்டு கைத்தொழில் உற்பத்தி போன்ற மேம்பட்ட வழங்கல்பக்க நிலைமைகள், வர்த்தக நடவடிக்கைகளை வசதிப்படுத்திய வீதி மற்றும் தொடர்பூட்டல் வலையமைப்பு ஆகியவற்றின் பக்கபலத்துடன் உத்வேகமடைந்த நுகர்வோர் கேள்வியின் மூலம் ஆதரவளிக்கப்பட்டு 8.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. மேலும், நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சியினாலும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியின் வளர்ச்சியில் காணப்பட்ட மீட்சியினாலும் ஆதரவளிக்கப்பட்டு இறக்குமதி வர்த்தகத் துணைத் துறையிலிருந்தான பெறுமதிகூட்டல் 9.4 சதவீதமான ஆரோக்கியமான வீதத்தில் வளர்ச்சியடைந்த வேளையில், ஏற்றுமதி வர்த்தகத் துணைத் துறையிலிருந்தான பெறுமதிகூட்டல்கள் 4.6 சதவீதம் கொண்ட மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்தன. பயணிகள் மற்றும் பொருள் போக்குவரத்துத் துணைத் துறை, முன்னைய ஆண்டின் 9.4 சதவீதத்திலிருந்து 2014இல் 7.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையுடன் மொ.உ.உற்பத்தியில் 14.6 சதவீதத்திற்கு வகைகூறும் போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் பணிகள் 7.3 சதவீதமான

குறைந்த வேகத்தில் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து துணைத் துறை உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையுடன் இசைந்து செல்லும் விதத்தில் வளர்ச்சியடைந்தது. சுற்றுலாவிடுதி மற்றும் உணவகங்கள் துணைத் துறை, மொ.உ.உற்பத்தியின் சதவீதப் பங்கு நியதிகளில் சிறியதாக இருப்பினும் தொடர்ச்சியான உயர்ந்த சுற்றுலாப் பயணிகளின் வருகையின் ஆதரவுடன் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தினைப் பதிவு செய்தது.


**அதிகரித்த தொழில் வாய்ப்புக்கள் அதேபோன்று தொழிற்படை பங்கேற்பு வீதத்திலான வீழ்ச்சி என்பவற்றுடன் தொழிலின்மை வீதம் வீழ்ச்சியடைந்தது.** 2014இன் தொழிலின்மை வீதம் 2013இன் 4.4 சதவீதத்திலிருந்து 4.3 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. ஆண் மற்றும் பெண் இருவரினதும் தொழிற்படை வீதங்கள் 2014இல் முறையே 3.2 சதவீதத்திலும் 6.5 சதவீதத்திலும் பெரும்பாலும் மாற்றமின்றியிருந்தன. 2014இல் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 2013இன் 53.8 சதவீதத்திலிருந்து 53.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தாழ்ந்த தொழிலின்மை வீதம் வீழ்ச்சியடைந்துவரும் தொழிற்படைப் பங்கேற்பு வீதத்துடன் இணைந்து சந்தையில் தொழிலாளர் பற்றாக்குறையினை எடுத்துக்காட்டுவதாக இருக்கக்கூடும். அதேநேரம், பொருளாதாரத்தின் அனைத்து மூன்று துறைகளிலுமிருந்தான சாதகமான பங்களிப்புக்களுடன் தொழிலாளர் உற்பத்தித்திறன் மட்டம் தொடர்ந்தும் அதிகரித்தது.

**2014ஆம் ஆண்டு முழுவதும் பணவீக்கம் குறைந்த ஒற்றை இலக்க மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டமையானது கேள்வி முகாமைத்துவக் கொள்கைகள், மேம்பட்ட வழங்கல் நிலைமைகள், நிருவகிக்கப்பட்ட விலைகளின் கீழ்நோக்கிய திருத்தம் மற்றும் காத்திரமான முறையில் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் கட்டுப்படுத்தப்பட்டமை என்பனவற்றைப் பிரதிபலிப்பதாக இருந்தது.** கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஆண்டிற்கு ஆண்டு ஏற்படும் மாற்றங்களின் மூலம்

வரைபடம் 1.3 ஆண்டுக்கான தொழிலின்மை வீதம்




வரைபடம் 1.4 ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம்




அளவிடப்படுகின்ற முதன்மைப் பணவீக்கம் (2006/07=100) 2013இன் 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014 திசெம்பரில் 2.1 சதவீதத்தினை அடைந்தது. ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் தொடர்ந்து ஆறாவது ஆண்டாக ஒற்றை இலக்க மட்டத்தில் காணப்பட்டது. அதேவேளை, முதன்மைப் பணவீக்கத்தின் ஆண்டுச் சராசரி வீதம் 2013 திசெம்பரின் 6.9 சதவீதத்திலிருந்து 2014 திசெம்பரில் 3.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. முன்மதியுடைய நாணய முகாமைத்துவம், பன்னாட்டு பண்ட விலைகள் மிதமடைந்தமை, ஒப்பீட்டு ரீதியில் உறுதியான செலாவணி வீதம், வழங்கல் பக்க தடைகளைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட இறைக் கொள்கை வழிமுறைகள் மற்றும் நன்கு முகாமைப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றின் இணைந்த தாக்கம் இவ்வாண்டு முழுவதும் பணவீக்கம் தாழ்ந்த மட்டத்தில் காணப்படுவதற்குப் பங்களித்தது. மின்வலு, நீர், திரவப் பெற்றோலிய வாயு மற்றும் எரிபொருள் என்பனவற்றின் நிருவாக விலைகளில் ஆண்டின் பின்னரைப் பகுதியில் செய்யப்பட்ட கீழ் நோக்கிய திருத்தங்கள் நவெம்பரில் முதன்மைப் பணவீக்கத்தில் 1.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைத் தோற்றுவித்தது. இது 2014இல் பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்ததொரு அளவாகும். மையப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2013 இறுதியின் 2.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014 திசெம்பரில் 3.2 சதவீதத்திற்கு மேல் நோக்கி நகர்ந்த போதும் ஆண்டு முழுவதும் தாழ்ந்த மட்டத்திலேயே காணப்பட்டது.

## வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

**இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது வெளிநாட்டுத் துறையின் சமநிலையற்ற தன்மையினைக் குறைத்துக் கொண்டதன் மூலமும் திரண்ட சென்மதி நிலுவையில் மிகையை ஏற்படுத்தியதன் மூலமும் 2014இல் அதன் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை மேம்படுத்திக் கொண்டது.** பணவனுப்பல்கள் மற்றும் பணிகளிலுள்ள வர்த்தகம் என்பனவற்றிலிருந்தான உயர்ந்த உட்பாய்ச்சல்கள் என்பனவற்றின் பக்கபலத்துடன்

நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 3.8 சதவீதத்திலிருந்து 2.7 சதவீதத்திற்கு குறுக்கமடைந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வர்த்தக கணக்கின் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் 11.3 சதவீதத்திலிருந்து 2014இல் 11.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த போதும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் இறக்குமதிகள் அதிகரிக்கத் தொடங்கியமையின் காரணமாக பெயரளவு நியதிகளில் வர்த்தகப் பற்றாக்குறை அதிகரித்தது. அதேவேளை, ஆண்டின் பின்னரைப் பகுதியில் அரச பிணையங்கள் மற்றும் பங்குரிமைச் சந்தைகளில் சில தளம்பல்கள் காணப்பட்ட போதும் அரசாங்கம், வங்கிகள் மற்றும் கம்பனித் துறைக்கான உட்பாய்ச்சல்கள் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கிற்கு பக்கபலமாக விளங்கி சென்மதி நிலுவை உயர்ந்த மிகையினைப் பதிவு செய்யவும் நாட்டின் மொத்தப் பன்னாட்டு ஒதுக்குகள் முன்னேற்றமடையவும் உதவின. இவ்விபிருத்திகள் செலாவணி வீதத்திலான குறுங்காலத் தளம்பல்களை சுமுகமாக்குவதற்கான மத்திய வங்கியின் முயற்சிகளுடன் சேர்ந்து ஆண்டு காலப்பகுதியில் ரூபாவினை ஒப்பீட்டு ரீதியில் உறுதியடையச் செய்தன.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வர்த்தகப் பற்றாக்குறை வீழ்ச்சியடைந்த போதும், 2014இல் பெயரளவு நியதிகளில் வர்த்தகப் பற்றாக்குறையில் குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.** 2014இன் முதலரைப் பகுதியில், ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 17.0 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இறக்குமதிகள் மீதான செலவினம் 1.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, வர்த்தகப் பற்றாக்குறையில் 2013இன் இதே காலப்பகுதியினைவிட 20.3 சதவீதம் கொண்ட சுருக்கத் தாக்கத்தினை ஏற்படுத்தியது. எனினும், 2014இன் பின்னரைப் பகுதியில் இறக்குமதிகள் விரைவாக வளர்ச்சியடைந்து ஏற்றுமதிகளின் வளர்ச்சி சரிவுற்றதன் காரணமாக திரண்ட வர்த்தகப் பற்றாக்குறை, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2014இல் ஐ.அ.டொலர் 8,287 மில்லியன் பெறுமதிக்கு 8.9 சதவீதத்தினால் விரிவடைந்தது.

**2014இல் ஏற்றுமதிகள் ஆரோக்கியமான வீதத்தில் வளர்ச்சியடைந்தமைக்கு உறுதியான உள்நாட்டுப் பேரண்டப் பொருளாதார சூழலுடன் சேர்ந்த மேம்பட்ட வெளிநாட்டுக் கேள்வியே உதவியாக அமைந்தது.** ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014இல் 7.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து, ஐ.அ.டொலர் 11,130 மில்லியனை அடைந்ததுடன் அனைத்து முக்கிய வகைகளிலும் அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தது. ஏற்றுமதி வருவாய்களுக்கான உயர்ந்த பங்களிப்பு கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்ததுடன் இதற்கு புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாக அமைந்தது. மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 44 சதவீதத்திற்கு வகைகூறிய புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2014இல் 9.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்து, பாரம்பரியமான மற்றும் பாரம்பரியமற்ற சந்தைகள் இரண்டிற்குமான ஆடை ஏற்றுமதிகள் அதிகரித்தமையினைப் பிரதிபலித்தன. அதேவேளை, வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் பெறுமதி நியதிகளில் 8.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தமைக்கு தெங்கு உற்பத்திகள், தேயிலை மற்றும் குறிப்பிட்ட சிறுவேளாண்மை உற்பத்திகளின் உயர்ந்த ஏற்றுமதிகளே காரணமாகும். தெங்கு உற்பத்திகள் மற்றும் தேயிலை என்பனவற்றின் ஏற்றுமதி வருவாய்கள் முறையே 74.2 சதவீதத்தினாலும் 5.6 சதவீதத்தினாலும் அதிகரித்தமைக்கு உயர்ந்த ஏற்றுமதி அளவுகளே முக்கிய காரணமாகும். எனினும், முன்னைய ஆண்டுப் பகுதியில் 38.8 சதவீதம் கொண்ட உயர்ந்த வளர்ச்சியைக்காட்டிய வாசனைத்திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2014இல் 25.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு முக்கிய ஏற்றுமதிப் பயிர்களின் குறைந்த அறுவடையே முக்கிய காரணமாகும்.

**இறக்குமதிகள் மீதான செலவினம் குறிப்பாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் அதிகரித்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014இல் 7.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தமைக்கு இடைநிலைப்பொருட்கள் மற்றும் நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளே வழிவகுத்தன.** இடைநிலைப்பொருட்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பெற்றோலியம், புடவை மற்றும் புடவை உற்பத்திப் பொருட்களின் உயர்ந்த இறக்குமதிகள் வழிவகுத்தன. ஆண்டின் பிற்பகுதியில் பன்னாட்டுச் சந்தையில் எரிபொருள் விலைகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்ட போதும், அதிகரித்த வெப்ப வலு உருவாக்கம் காரணமாக மேற்கொள்ளப்பட்ட உயர்ந்தளவு இறக்குமதிகள், எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 6.7 சதவீதத்தினால் அதிகரிக்கக் காரணமாகியது. புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்புடன் ஒத்துச்செல்லும் விதத்தில் புடவைகள் மற்றும் புடவைப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 13.8 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள் அதிகரித்து உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலும் ஏற்பட்ட விரிவாக்கத்தினைப் பிரதிபலித்தது. தனிப்பட்ட பயன்பாட்டிற்கான உந்து ஊர்திகள் மற்றும் அரிசி என்பனவற்றின் இறக்குமதிகள் மீதான உயர்ந்த செலவினம் நுகர்வுப்பொருள் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தன. எனினும், இவ்வாண்டுப் பகுதியில், முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் பெறுமதி நியதிகளில் 2.4 சதவீதத்தினால்


வீழ்ச்சியடைந்தமைக்கு பொறிகள், கருவிகள் மற்றும் கட்டடப்பொருட்களின் இறக்குமதிகள் குறைவடைந்தமையே பெருமளவிற்குக் காரணமாகும்.

**பணிகளிலுள்ள வர்த்தகத்திலிருந்தான அதிகரித்த உட்பாய்ச்சல்கள் அதேபோன்று உயர்ந்த தொழிலாளர் பணவனுப்பல்கள் 2014ஆம் ஆண்டுப் பகுதியில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை குறைவடையப் பங்களித்தன.** பணிகள் கணக்கின் மிகைக்கு போக்குவரத்து, பயணம், தொலைத் தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள் துணைத் துறைகளுக்கு ஏற்பட்ட உயர்ந்த உட்பாய்ச்சல்கள் பெருமளவிற்கு உதவியாக அமைந்தன. சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு, சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த சராசரி செலவிடல், தங்கியிருக்கும் சராசரிக் காலம் என்பனவற்றுடன் இவ்வாண்டுப் பகுதியில் அதிகரித்துக் காணப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகையும் சேர்ந்து கொண்டமை பெரும் அநுசரணையாக விளங்கியது. அதேவேளை, அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகை காரணமாக அதிகரித்த வர்த்தக நடவடிக்கைகளும் பயணிகள் கட்டணங்களிலிருந்தான அதிகரித்த வருவாய்களும் போக்குவரத்துத் துணைத் துறையின் சாதகமான அபிவிருத்திக்குப் பங்களித்தன. 2014ஆம் ஆண்டுப் பகுதியில் தொலைத் தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள் துணைத் துறைகள் தொடர்ந்தும் விரிவடைந்தன. புதிய தொழில்நுட்பவியல் புதுமைகளுடன் தொடர்ச்சியாக விரிவடைந்துவரும் தொலைத் தொடர்பூட்டல் பணிகள், வெளிமூலங்களிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறைகள் மற்றும் வெளிமூலங்களிலிருந்து அறிவினைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறைகள் என்பனவற்றிலிருந்தான அதிகரித்த வருவாய்கள் தொலைத் தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகளின் விரிவாக்கத்திற்குப் பங்களித்தன. அதேவேளை, தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு, தொழில்சார் நிபுணர்கள் மற்றும் தேர்ச்சிபெற்றோர் வகையின் கீழ் புலம்பெயர்ந்தவர்களின் விரிவாக்கமே உதவியாக இருந்தது. இதன் விளைவாக, நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறை 2013இன் ஐ.அ.டொலர் 2,541 மில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 3.8 சதவீதம்) 2014இல் ஐ.அ.டொலர் 2,018 மில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியின் 2.7 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது.

**தனியார் துறைக்கும் அதேபோன்று அரசாங்கத்திற்குமான பெறுகைகளின் காரணமாக நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் அதிகரித்தன.** 2014இல் நிதியியல் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சல்களாக ஆறாவது மற்றும் ஏழாவது நாட்டிற்கான பன்னாட்டு முறிகளிலிருந்து பெறப்பட்ட ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் விளங்கியது. நிதியியல் கணக்கிற்கு வங்கித்தொழில் துறை மற்றும் முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளுடன் தொடர்பான உட்பாய்ச்சல்கள் உதவியாக அமைந்தன. அதேவேளை, அரசாங்கத்திற்கான வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் செயற்றிட்டக் கடன்கள் வடிவிலமைந்த குறிப்பாக, முக்கிய உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் என்பனவற்றின் பேரிலான உட்பாய்ச்சல்கள் நிதியியல் கணக்கில் மிதமான உட்பாய்ச்சல்களைப் பதிவு செய்தன. தனியார் துறைக்கான உட்பாய்ச்சல்களுக்கு சிறிலங்கன் எயார்லையின்சின் பன்னாட்டு முறி வழங்கல்களும் ஏனைய வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்களும் உதவியாக அமைந்தன. அதேவேளை, தேசிய சேமிப்பு வங்கியின் பன்னாட்டு முறி வழங்கல்கள் இவ்வாண்டுப் பகுதியில் வங்கித்தொழில் துறைக்கான முக்கிய உட்பாய்ச்சலைக் குறிப்பதாகக் காணப்பட்டது. எனினும், 2014இன் பின்னரைப் பகுதியில் தோற்றம்பெற்று வருகின்ற சந்தைகளிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் காணப்பட்டதொரு சூழ்நிலையில் அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை என்பவற்றில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் தொடர்ந்தும் குறைக்கப்பட்ட அளவிலேயே காணப்பட்டிருந்தது. எனினும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை இவ்வாண்டுப் பகுதியில் தேறிய உட்பாய்ச்சல்களைப் பதிவு செய்தது.

**வெளிநாட்டுக் கடன்பாடுகள் வடிவில் தனியார் துறைக்கான உயர்ந்த உட்பாய்ச்சல்கள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல்கள் மற்றும் வைப்புக்களை ஏற்கின்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பன்னாட்டு படுகடன் பிணையங்கள் என்பன நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் நிலைமையில் அதிகரிப்பினைத் தோற்றுவித்தது.** ண இதன்படி, நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் இருப்பு 2014 இறுதியில் ஐ.அ.டொலர் 43.0 பில்லியனாக விளங்கி 2013 இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 39.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 7.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த

வரைபடம் 1.5 சென்மதி நிலுவை




பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

1

வெளிநாட்டுப் படுகடன் 2013 இறுதியின் 59.4 சதவீதத்திலிருந்து 2014 இறுதியில் 57.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு மொத்த வெளிநாட்டுப் படுகடன் இருப்பின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தி வளர்ச்சி உயர்ந்த வீதத்தில் காணப்பட்டமையே காரணமாகும். அதேநேரம், 2014ஆம் ஆண்டுப் பகுதியில் மொத்த வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்தமைக்கு திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் மீள்கொடுப்பனவுகளில் ஏற்பட்ட குறைப்பும் அரசின் நீண்ட காலக் கடன்கள் தொடர்பான மூலதனக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் முக்கிய காரணங்களாக அமைந்தன. எனினும், அரசின் வெளிநின்ற நடுத்தர மற்றும் நீண்ட காலப் படுகடன் என்பன மீதான வட்டிக் கொடுப்பனவுகள் இவ்வாண்டுக் காலப்பகுதியில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. இதன் விளைவாக, பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளினது சதவீதமாகப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்தமைக்கு, குறைவடைந்த மூலதனக் கொடுப்பனவுகளும் பொருட்கள் மற்றும் பணிகளினது ஏற்றுமதிகளின் அதிகரித்த வருவாய்களும் முக்கிய காரணங்களாக விளங்கின.


**2014இல் நடைமுறைக் கணக்கில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மற்றும் நிதியியல் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் என்பனவற்றின் காரணமாக சென்மதி நிலுவை மிகையைப் பதிவு செய்தது.** இவ்வாண்டுப் பகுதியில் சென்மதி நிலுவை மிகை 2013இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 985 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1,369 மில்லியனுக்கு மேம்பட்டது. இவ்வபிருத்திகளின் காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2013இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 7.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ஐ.அ.டொலர் 8.2 பில்லியனுக்கு அதிகரித்தன. 2014 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 5.1 மாத பொருட்களின் இறக்குமதிகளுக்கும் 4.3 மாத பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிக்கும் சமமானதாக இருந்தது. அதேவேளை, 2014 இறுதியில் வைப்புக்களை ஏற்கின்ற நிறுவனங்களின் வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 9.9 பில்லியனாக விளங்கி 6.1 மாத பொருட்களின் இறக்குமதிக்கும் 5.1 மாத பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிக்கும் சமமானதாக விளங்கின. எனினும், வெளிநாட்டுச் செலாவணிக்கான அதிகரித்த கேள்வியின் காரணமாக 2015இன் முதன் காலாண்டுப் பகுதியில் வெளிநாட்டு ஒதுக்குகளில் ஓரளவு வீழ்ச்சி காணப்பட்டது.

**செலாவணி வீதத்தின் மிகையான தளம்பல்களைக் குறைப்பதற்காகவும் அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட கிரமமான தலையீடுகளால் ஆதரவளிக்கப்பட்டு 2014இல் இலங்கை ரூபா ஒப்பீட்டு அடிப்படையில் உறுதியாகக் காணப்பட்டது.** பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான அதிகரித்த வருவாய்கள், உயர்ந்த தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் என்பனவற்றின் பின்னணியில், ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் 0.29 சதவீதத்தினால் உயர்வடைந்த இலங்கை ரூபாய் ஆண்டின் இறுதிக் காலாண்டில் 0.47 சதவீதத்தினால் தேய்வடைந்தது. இறக்குமதியாளர்களின் ஐ.அ.டொலருக்கான அதிகரித்த கேள்வி மற்றும் குறுங்கால முதலீடுகள் சிலவற்றின் வெளிப்பாய்ச்சல் என்பன சில அழுத்தங்கள் உருவாக்கப்படுவதற்கு முக்கிய காரணங்களாக இருந்ததுடன் இதன் காரணமாக 2014இன் நான்காம் காலாண்டில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தது. இதன் விளைவாக, இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2014 இறுதியில் 0.23 சதவீதத்தால் ரூ.131.05 இற்கு தேய்வடைந்த போதும், குறுக்கு நாணயச் செலாவணி வீத அசைவுகளின் விளைவாக ஏனைய அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் இலங்கை ரூபா உயர்வடைந்தது. அதேவேளை, 5 நாணய மற்றும் 24 நாணயக் கூடைகளை அடிப்படையாகக் கொண்ட பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதமும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதமும் இவ்வாண்டுப் பகுதியில் தொடர்ந்தும் உயர்வடைந்தன. சராசரியாக, 1-மாத, 3-மாத மற்றும் 6-மாதங்களுக்கான முன்னோக்கிய கட்டணம் 2014ஆம் ஆண்டுப் பகுதியில், வட்டி வீத வேறுபாடுகளிலும் பார்க்கக் குறைவானதாக விளங்கி, குறுங்காலப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்குள் மேலும் உட்பாய்ச்சல் ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்புக்களை எடுத்துக்காட்டியது. எனினும், உள்நாட்டு நாணயத்தின் மீதான சில தேய்வு அழுத்தங்களுடன் ஆண்டின் இறுதிப்பகுதியில் இப்போக்கு மாற்றமடைந்திருந்தது.


## இறைத் துறை அபிவிருத்திகள்

**2014ஆம் ஆண்டிற்கான இறை இலக்குகள், வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை மேலும் குறைக்கும் அதேவேளையில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டுடன் கூடிய உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்காக முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் 2014 இற்கான இறை முகாமைத்துவ அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டவாறு, 2014 - 2017 காலப்பகுதிக்கான நடுத்தர கால பேரண்ட இறைக் கட்டமைப்புடன் இசைந்துசெல்லும் விதத்தில் நிர்ணயிக்கப்பட்டன.** இதற்கமைய, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை 2013இன் மொ.உ.உற்பத்தியின் 5.9 சதவீதத்திலிருந்து 2014இல் மொ.உ.உற்பத்தியின் 5.2 சதவீதத்திற்குக் குறைப்பதற்கு இலக்கிடப்பட்டது. இவ்விலக்கினை அடைந்துகொள்ளும் பொருட்டு, மொத்த அரச அரசிறையினை 2014இன் மொ.உ.உற்பத்தியில் 14.5 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு

வரைபடம் 1.6 அரசிறை, செலவினம் மற்றும் திரண்ட இறைப் பற்றாக்குறை (மொ.உ.உ. இன் சதவீதமாக)




வரைபடம் 1.7 அரச படுகடன் (மொ.உ.உ. இன் சதவீதமாக)




எதிர்பார்க்கப்பட்ட வேளையில் மீண்டெழும் செலவினத்தினை மொ.உ.உற்பத்தியின் 13.4 சதவீதத்தில் கட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அதேவேளை, மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் மொ.உ.உற்பத்தியின் 6.6 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

**அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்களும் முயற்சிகளும் காணப்பட்ட போதும்கூட, கடந்த ஒரு சில ஆண்டுகளாகக் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து சென்ற போக்கிற்கு மாறாக 2014இல் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியில் 6.0 சதவீதத்தினைப் பதிவு செய்தமையின் மூலம் இறை இலக்குகளில் குறிப்பிடத்தக்களவு பிறழ்வுகளை அவதானிக்க முடிந்தது.** செலவினப் பக்கத்தில் சாதகமான அபிவிருத்திக்கிடையிலும் வரி அரசிறை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திலும் பார்க்க வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக அரச அரசிறை மொ.உ.உற்பத்தியில் 12.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையின் விளைவே இதுவாகும். மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் முன்னைய ஆண்டின் 13.9 சதவீதத்திலிருந்து 2014இல் மொ.உ.உற்பத்தியில் 13.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில், மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 2013இன் 5.4 சதவீதத்திலிருந்து 4.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, அரசின் குறைச் சேமிப்பினைப் பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையும் முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 0.8 சதவீதத்திலிருந்து 2014இல் மொ.உ.உற்பத்தியின் 1.3 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் ஆரம்பப் பற்றாக்குறை 0.8 சதவீதத்திலிருந்து 1.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொ.உ.உற்பத்தியின் 74.3 சதவீதமான மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரச படுகடன் முன்னைய ஆண்டின் 78.3 சதவீதத்திலிருந்து 2014இல் 75.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, பெயரளவு மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட விரிவாக்கத்திலிருந்து கிடைத்த நன்மைகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தொடர்ந்தும் வீழ்ச்சிப் போக்கைக் கொண்டிருந்தது.

**அரச அரசிறையினை அதிகரிப்பதற்குப் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டமைக்கிடையிலும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச அரசிறை 2013இன் 13.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் மொ.உ.உற்பத்தியின் 12.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச அரசிறை வீழ்ச்சியடைந்து வருகின்றமை அண்மைக் காலத்தில் இறைத் துறையில் முக்கியமானதொரு கரிசனையாக இருந்து வருவதனால், வரி முறைமையினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக 2014இல் அநேக வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில், நேரடி மற்றும் மறைமுக வரி அரசிறைகள் இரண்டினையும் உயர்த்துவதற்காக வரி விலக்கல்களும் சலுகைகளும் சிக்கனவொழுங்குமுறைப்படுத்தப்பட்டன. நேரடி வரிகளைப் பொறுத்தவரையில் தாழ்ந்த வரி அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்ட அதேவேளையில் வரித்தளம் மேம்படுத்தப்பட்டமையின் மூலம் கம்பனி மற்றும் தனியாள் வருமான வரி அமைப்பு மேலும் திரட்சிப்படுத்தப்பட்டது. மறைமுக வரிப் பக்கத்தில் பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி இரண்டினதும் தளம் விரிவாக்கப்பட்டது. மேலும், ஏற்கனவேயுள்ள வரி அமைப்பினை இலகுபடுத்தியதன் மூலம் குறிப்பாக, இறக்குமதிகள் மீதான பல்வேறு வரிகளையும் ஒரு வரி முறைமைக்குள் மாற்றிக் கொண்டதன் மூலம் வரி முறைமையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அதேநேரம், நடவடிக்கைகளைத் தன்னியக்கப்படுத்தியமை, மேம்படுத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் வெளிவாரி இடைமுகங்களை இணைப்பதற்காக வரி செலுத்துவோருக்குத் தனியான அடையாள இலக்கம் போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டமை என்பன மூலம் அரசிறைச் சேகரிப்பு முகவர்களின் வரி நிருவாகத்தினை வலுப்படுத்துவதன்

மீது வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்தகைய வழிமுறைகளின் பயன் காரணமாக, பெயரளவு நியதிகளிலான அரசிறை 2013இன் ரூ.1,137.4 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.1,195.2 பில்லியனுக்கு 5.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு மறைமுக வரி அரசிறைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். கம்பனி மற்றும் கம்பனியல்லா வருமான வரி, தனியாள் வருமான வரி, பிடித்துவைத்தல் வரி மற்றும் பொருளாதார பணிக் கட்டணம் போன்ற நேரடி வரிகள் வடிவில் உருவாக்கப்பட்ட அரசிறை வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, பெயரளவு நியதிகளில், வரியல்லா அரசிறை முன்னைய ஆண்டின் 7.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக 2014இல் 10.1 சதவீதத்தினால் ரூ.144.8 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு அதிகரித்த இலாபமும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளிலிருந்தான பங்கிலாபங்கள் மாற்றல் செய்யப்பட்டமையும் முக்கிய காரணங்களாக அமைந்தன.

**அரசின் அரசிறைப் பற்றாக்குறையினைக் கருத்திற் கொண்டு மீண்டெழும் செலவினத்தின் சிறந்த முகாமைத்துவத்தினையும் மூலதனச் செலவினத்தினை ஒழுங்குமுறைப்படுத்துவதனையும் உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகளின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 2013இன் 19.2 சதவீதத்திலிருந்து 2014இல் 18.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.** மொத்தச் செலவினத்தில் ஏற்பட்ட குறைப்பு, மீண்டெழும் செலவினத்திலும் அதேபோன்று மூலதனச் செலவினத்திலும் தேறிய கடன் வழங்கலும் ஏற்பட்ட குறைப்புக்களின் இணைந்த விளைவாகும். எனினும், பெயரளவு நியதிகளில், மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 2013இன் ரூ.1,669.4 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.1,795.9 பில்லியனுக்கு 7.6 சதவீதத்தினால் அதிகரித்தபோதும் கூட, இது இவ்வாண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டச் செலவான ரூ.1,985.6 பில்லியனிலும் பார்க்கக் குறைவாகவே காணப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில், மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களின் சிறந்த முகாமைத்துவத்திற்காக அரசாங்கம் பல வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது. தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன்படி அனைத்துச் செலவிடல் முகவர்களும் 2014ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கங்களுக்கேற்ப தமது மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினத்தினை, குறிப்பாக மேலதிக நேர வேலை, எரிபொருள், மின்வலு, நீர், போக்குவரத்து மற்றும் வெளிநாட்டுப் பயணம் என்பன மீதான செலவினத்தில் கூடியளவு கவனத்தினைச் செலுத்தி மட்டுப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. அத்தகைய வழிமுறைகளிலிருந்து கிடைத்த நன்மைகளின் காரணமாக அரசாங்கம் மீண்டெழும் செலவினத்தை இலக்கிடப்பட்ட மட்டத்திற்குக் கீழே பேணக்கூடியதாக இருந்தது. வட்டிக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்தமையின் முக்கிய விளைவாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, மீண்டெழும் செலவினம் 2013இன் 13.9 சதவீதத்திலிருந்து 2014இல் 13.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேநேரம், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் முன்னைய ஆண்டின் 5.4 சதவீதத்திலிருந்து 2014இல் 4.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் இது ஆண்டு இலக்கான மொ.உ.உற்பத்தியின் 6.6 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்குக் கீழே காணப்பட்டது. இதன்படி, அரச முதலீடு மொ.உ.உற்பத்தியின் 5.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**வரவு செலவுத்திட்டத்தினை நிதியிடுவதில் அரசாங்கம் 2014இல் உள்நாட்டு மூலங்களை, குறிப்பாக வங்கியல்லா துறையிலிருந்தான மூலங்களைப் பயன்படுத்திக் கொண்டது.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகத் திரண்ட இறைப் பற்றாக்குறை, 2013இன் 5.9 சதவீதத்திலிருந்து 6.0 சதவீதத்திற்கு அதிகரித்து, 2014இல் ரூ.591.2 பில்லியனாக விளங்கியது. 2014இல் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு வங்கியல்லாத் துறையின் மீது அரசாங்கம் முக்கியமாகத் தங்கியிருந்தது. இதற்கமைய, தேறிய உள்நாட்டு நிதியிடல் ஆரம்ப மதிப்பீடான ரூ.229.3 பில்லியன் மற்றும் முன்னைய ரூ.392.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ரூ.378.7 பில்லியனாகக் காணப்பட்டது. மொத்தத் தேறிய உள்நாட்டு நிதியிடலில் 66.5 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூ.251.8 பில்லியன் வங்கித்தொழில் துறையல்லாத துறையிலிருந்து திரட்டப்பட்டது. 2014ஆம் ஆண்டுப் பகுதியில், வங்கித்தொழில் துறைக் கடன்பாடுகள் 2013இன் ரூ.297 பில்லியனிலிருந்து ரூ.126.9 பில்லியனுக்குக் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்த போதும் இது வரவு செலவுத்திட்ட இலக்கான ரூ.100 பில்லியனைவிட உயர்வானதாகவே காணப்பட்டது. மூலவள இடைவெளியினை நிரப்புவதற்கான வங்கி நிதியிடலில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு, முக்கியமாக திறைசேரி உண்டியல்களின் கொள்வனவு மற்றும் தற்காலிக முற்பணங்களூடான மத்திய வங்கியிலிருந்தான கடன்பாடுகள் 2013இன் ரூ.164.8 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் 2014இல் ரூ.35.7 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கிடையிலும் வர்த்தக வங்கிகளிலிருந்தான கடன்பாடுகள் 2013இன் ரூ.461.8 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.91.3 பில்லியனுக்குக் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளை, தேறிய வெளிநாட்டு நிதியிடல் ரூ.212.5 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டிலிருந்து அதிகரித்துக் காணப்பட்ட போதும் ஆரம்ப மதிப்பீடான ரூ.286.8 பில்லியனை விடக் குறைவாகக் காணப்பட்டது. இதன்படி, மொத்த நிதியிடல் தேவைப்பாட்டில்

உள்நாட்டு நிதியிடல் 2013இன் 76 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 64.1 சதவீதத்திற்குப் பங்களித்த வேளையில் வெளிநாட்டு நிதியிடல் 2013இன் 24 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 35.9 சதவீதத்திற்குப் பங்களித்தது.

**மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான மத்திய அரச படுகடனின் விகிதத்தில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு 2014இலும் தொடர்ந்தது.** 2014 திசெம்பர் இறுதியில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வெளிநின்ற அரச படுகடன் 2013 இறுதியில் பதிவு செய்யப்பட்ட 78.3 சதவீதத்திலிருந்து 75.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், பெயரளவு நியதிகளில், மொத்த படுகடன் இருப்பு முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ.6,793.2 பில்லியனிலிருந்து ரூ.7,390.9 பில்லியனுக்கு 8.8 சதவீதத்தினால் அதிகரித்தது.

**இறைத் துறையில் மேலும் திரட்சிப்படுத்தல் இடம்பெறுமென 2015ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டது.** இறைத் திரட்சிச் செயன்முறையினைத் தொடரும் நோக்குடனான 2015ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்திற்கு 2014 நவெம்பரில் பாராளுமன்றத்தில் ஒப்புதலளிக்கப்பட்டது. இதன்படி, வரி முறைமையினை இலகுபடுத்துவதன் மூலமும் வரித் தளத்தினை விரிவாக்குவதன் மூலமும் அரச அரசிறையினை உயர்த்துவதற்காகவும் அதேவேளையில் அரச செலவின முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்காகவும் வரவு செலவுத்திட்டத்தில் பல கொள்கை வழிமுறைகள் முன்மொழியப்பட்டன. அத்துடன், நடுத்தர கால வளர்ச்சி வாய்ப்புக்களை நனவாக்குவதற்கு ஆதரவளிக்க உயர்ந்தமட்ட அரச முதலீடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. 2015 சனவரியில் இடம்பெற்ற சனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து 2015ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத்திட்டம் 2015 சனவரி 29ஆம் நாளன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது வாழ்க்கைச் செலவையும் வருமான ஏற்றத்தாழ்வுகளையும் குறைப்பதற்குப் பல வழிமுறைகளை அறிமுகப்படுத்திய வேளையில் இறைத்திரட்சியை மேலும் வலுப்படுத்துவதற்கான நோக்கத்தினையும் அறிவித்தது. இடைக்கால வரவு செலவுத்திட்டமானது வரித் தளத்தினை விரிவாக்குவதன் மூலமும் வரி நிருவாகத்தினை மேம்படுத்துவதன் மூலமும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நேரடி வரி அரசிறையினை அதிகரிப்பதன் மீதும் மீண்டெழும் செலவினத்தினை மேலும் சிக்கனப்படுத்துவதன் மீதும் கவனத்தினைச் செலுத்தியது. பொருளாதார நடவடிக்கைகளில் தனியார் துறையின் ஈடுபாடு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதன் காரணமாக அரச முதலீடுகள் குறைந்த மட்டத்தில் எறிவுசெய்யப்பட்டன. இதன்படி, இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் கீழ், 2015இல் திரண்ட இறைப் பற்றாக்குறை 2015இல் மொ.உ.உற்பத்தியில் 4.4 சதவீதத்திற்கு மேலும் குறைவடையுமென மதிப்பிடப்பட்டது.


## நாணயத் துறை அபிவிருத்திகள்

**தாழ்ந்த பணவீக்கச் சூழலொன்றில், மத்திய வங்கி 2014ஆம் ஆண்டுப் பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையொன்றினைப் பேணியது.** 2014 சனவரியில், மத்திய வங்கி அதன் கொள்கை வட்டி வீதங்களான மீள்கொள்வனவு வீதத்தினையும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தினையும் முறையே துணைநில் வைப்பு வசதி வீதமெனவும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதமெனவும் மீளப் பெயரிட்டுக் கொண்டது. அதேவேளை, குறுங்கால வட்டி வீதங்களின் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு 2014 சனவரியில் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் 50 அடிப்படைப் புள்ளிகளினால் 8.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்ட வேளையில் துணைநில் வைப்பு வசதி வீதம் இவ்வாண்டுப் பகுதியில் 6.50 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது. துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தின் இக்குறைப்புடன் மத்திய வங்கியின் துணைநில் வீத வீச்சு 200 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 150 அடிப்படைப் புள்ளிகளுக்குக் குறுக்கப்பட்டது. அதேவேளை, ரூபாக் கொடுக்கல்வாங்கல்களிலுள்ள மத்திய வங்கியின் பூஜ்ய கொடுகடன் இடர்நேர்வினைப் பரிசீலனையில் கொண்டு மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி 2014 பெப்புருவரியிலிருந்து பிணையமற்றதாக்கப்பட்ட வேளையில், திறந்த சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் கீழான மற்றைய கொடுக்கல்வாங்கல்கள் பிணையமய அடிப்படையிலேயே தொடர்ந்தும் காணப்பட்டன. சந்தையில் உயர்வான மிகைத் திரவத்தன்மை காணப்பட்டமைக்கிடையிலும் தனியார் துறைக்கான கொடுகடனில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சியைக் கவனித்திற்கொண்டு தனியார் துறைக்கு கடன் வழங்குவதற்கு வர்த்தக வங்கிகளை ஊக்குவிக்கும் பொருட்டு தற்காலிகமானதொரு வழிமுறையாக 2014 செத்தெம்பரில் துணைநில் வைப்பு வசதியை பெற்றுக்கொள்வதற்கான வழிவகையினை மத்திய வங்கி ஒழுங்குமுறைப்படுத்தியது. இதன்படி, திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப் பங்கேற்பாளர்கள் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதமான 6.50 சதவீதத்தில் துணைநில் வைப்பு வசதியினை அணுகுவதற்குக் கலண்டர் மாதமொன்றில் உயர்ந்தபட்ச மூன்று தடவைகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டதுடன், துணைநில் வைப்பு வசதியின் கீழான ஏதேனும் மேலதிக வைப்புக்கள் சிறப்பு வீதமான 5.00 சதவீதத்தில் அனுமதிக்கப்பட்டன. இவ்வழிமுறைகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில் ஓரிரவு சந்தை வட்டி வீதங்கள் துணைநில் வீத வீச்சின் கீழ் எல்லைக்கும் கீழே குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்த வேளையில் ஏனைய சந்தை வட்டி வீதங்களும் 2014ஆம் ஆண்டுப் பகுதியில் வரலாற்றிலேயே மிகக் குறைந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்தன. 2014இன் பிற்பகுதியில்

தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கடனில் ஏற்பட்ட வளர்ச்சியின் மீளெழுச்சியின் காரணமாகவும் 2015இல் கொடுகடன் வளர்ச்சி நிகழ்ந்திருப்பதற்கான அறிகுறிகள் காணப்படுவதனாலும் துணைநில் வைப்பு வசதி ஒழுங்குமுறைப்படுத்தலானது 2015 மாச்சு 02ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அகற்றப்பட்டது. வீழ்ச்சியடைந்து செல்லும் பணவீக்கத்துடன் இசைவற்ற முறையில் காணப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் நடத்தை மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கான முதலீட்டுத் தேவை என்பன தொடர்பில் காணப்பட்ட கரிசனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக, மத்திய வங்கி 2015 ஏப்பிறல் 15 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன் வழங்கல் வீதத்தினையும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.00 சதவீதத்திற்கும் 7.50 சதவீதத்திற்கும் குறைத்தது.

**தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், உள்நாட்டுப் பணச் சந்தையில் காணப்பட்ட மிகையான ரூபாத் திரவத்தன்மை 2014இல் மிக உயர்வாகக் காணப்பட்டது.** உள்நாட்டின் வெளிநாட்டு நாணயச் சந்தையிலிருந்து மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் தேறிய கொள்வனவுகள், வர்த்தக வங்கிகளுடனான மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகள், அதேபோன்று 2014 சனவரியில் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகளின் ஒரு பகுதி கொள்வனவு செய்யப்பட்டமை என்பன 2014ஆம் ஆண்டுப் பகுதியில் உள்நாட்டுப் பணச் சந்தைக்குள் கணிசமானளவு ரூபாத் திரவத்தன்மையினைப் புகுத்தின. ஓரிரவு மிகையான திரவத்தன்மை ரூ.0.9 பில்லியனிலிருந்து ரூ.107.2 வரையிலான வீச்சில் காணப்பட்டதன் மூலம் 2014ஆம் ஆண்டுப் பகுதியில் சராசரியாக ரூ.29.1 பில்லியனாகக் காணப்பட்ட வேளையில் மொத்தச் சந்தை திரவத்தன்மை 2013 இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூ.71.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014 இறுதியில் ரூ.330.9 பில்லியனாகக் காணப்பட்டது. சந்தை வட்டி வீதங்களில் நியாயமற்ற தளம்பல்கள் ஏற்படுவதனைத் தவிர்க்கும் பொருட்டு மத்திய வங்கி இவ்வாண்டுப் பகுதியில் ஓரிரவு ஏலங்கள், குறுங்கால மற்றும் நீண்ட கால மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் அதேபோன்று திறைசேரி உண்டியல்களின் உடனடிக் கொள்வனவு என்பனவற்றினூடாக மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதில் தீவிரமாக ஈடுபட்டது. மத்திய வங்கி வசமிருந்த அரச பிணையங்கள், சந்தையில் காணப்பட்ட திரவத்தன்மை தேவைப்பாடுகளுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டு ரீதியில் குறைவாக இருந்தமையின் காரணமாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துவதற்காக, மத்திய வங்கி ஊழியர் சேம நிதியத்திலிருந்து கடனாகப் பெற்ற பிணையங்களைப் பயன்படுத்தியது.

வரைபடம் 1.8 தனியார் துறைக்கான பண மற்றும் கொடுகடனின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி





**தாழ்ந்த பணவீக்கத்தினையும் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியையும் இலக்காகக் கொண்ட கட்டமைப்பொன்றிற்குள் ஏனைய கொள்கைச் சாதனங்களின் ஆதரவுடன் கொள்கை வீதங்களினூடாக மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கையினை மேற்கொண்டது.** 2014இன் ஆரம்பத்தில் ஆரம்ப எதிர்பார்ப்பொன்றாக, விரிந்த பணம் ($M_{2b}$) 14 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்ட வேளையில், தனியார் துறைக்கான கொடுகடனும் பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகத்திற்கு வசதியளிக்கும் விதத்தில் இதையொத்த வீதத்தில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும், தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி குறிப்பாக 2014இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் சுருக்கமடைந்தமையின் காரணமாக விரிந்த பணத்தின் விரிவாக்கம் ஓரளவிற்கு மிதமடைந்தது. இவ்வாண்டுப் பகுதியில் தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் குறைவாக இருந்தமையானது 2014ஆம் ஆண்டிற்கான நாணய நிகழ்ச்சித்திட்டத்தில் திருத்தமொன்றினைத் தேவைப்படுத்திய போதும் கூட, வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் விரிந்த பணத்தின் மீதான தாழ்ந்த தனியார் துறைக் கொடுகடன் வளர்ச்சியின் தாக்கத்தினை எதிரீடு செய்தது. அதன்படி, 2014ஆம் ஆண்டிற்கான விரிந்த பணத்தின் சராசரி வளர்ச்சிக்கான எறிவுகள் 13.5 சதவீதத்திற்குக் கீழ் நோக்கித் திருத்தப்பட்டது.

**2014இல் $M_{2b}$ எதிர்பார்க்கப்பட்டவாறு அதிகரித்தது.** 2014ஆம் ஆண்டுப் பகுதியில் $M_{2b}$ ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2013 இறுதியில் காணப்பட்ட 16.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 13.4 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் விரிந்த பணத்தின் சராசரி வளர்ச்சி 13.3 சதவீதமாகக் காணப்பட்டது. விரிந்த பணத்தின் விரிவாக்கத்திற்கு இவ்வாண்டுப் பகுதியில் வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களும் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களும்

முறையே ரூ.91.5 பில்லியனாலும் ரூ.366.5 பில்லியனாலும் அதிகரித்தமையே முக்கிய காரணமாக இருந்தது. 2014இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில், தனியார் துறையினாலும் அதேபோன்று அரச கூட்டுத்தாபனங்களினாலும் பெறப்பட்ட கொடுகடன் சுருக்கமடைந்தமையின் முக்கிய காரணமாக தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் ரூ.64.7 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமையின் விளைவாக வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ.289 பில்லியனால் அதிகரித்தமையே விரிந்த பணம் அதிகரிப்பதற்கும் காரணமாயிற்று. எனினும், 2014இன் இறுதிக் காலாண்டில் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனையின் முக்கிய காரணமாக தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ.134.4 பில்லியன் கொண்ட சுருக்கத்தினைப் பதிவு செய்தது. 2014இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில், தனியார் துறைக்கான கொடுகடன் சுருக்கமொன்றினைப் பதிவு செய்தமைக்கு, பன்னாட்டு தங்க விலைகளில் ஏற்பட்ட குறைப்பினைத் தொடர்ந்து வர்த்தக வங்கிகளின் அடகு முற்பணங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியும் வெளிநாட்டு மூலவளங்கள் உள்ளிட்ட மாற்று நிதியிடல் மூலவளங்கள் அதிகளவில் கிடைக்கத்தக்கதாக இருந்தமையும் முக்கிய காரணங்களாகக் காணப்பட்டன. எனினும், மத்திய வங்கியின் கொள்கை வழிமுறைகளுடன் சேர்ந்து காணப்பட்ட வரலாற்றிலேயே குறைந்த வட்டி வீதங்கள், அடகு முற்பணங்களில் காணப்பட்ட சுருக்கத் தாக்கம் படிப்படியாக மறைந்து போனமை என்பனவற்றின் துணையுடன், 2014இன் இறுதிப் பகுதியில் தனியார் துறைக் கொடுகடன் மீள உத்வேகமடைந்தது. இதன்படி, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் தனியார் துறைக்கான கொடுகடன் 8.8 சதவீதத்தினால் அதிகரித்து 2014இன் இறுதியளவில் ரூ.223.9 பில்லியன் கொண்ட திரண்ட அதிகரிப்பினைப்

**வரைபடம் 1.9 — துணைநில் வீத வீச்சு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்கள்**




பதிவு செய்தது. உள்நாட்டுக் கொடுகடனில், அரசிற்கான தேறிய கொடுகடன் 2014ஆம் ஆண்டுப் பகுதியில் ரூ.134.6 பில்லியனால் அதிகரித்து அரச வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டினை விஞ்சியது. அதேவேளை, 2014இன் தொடக்கப் பகுதியில் குறிப்பிடத்தக்க சுருக்கம் காணப்பட்டமைக்கிடையிலும் அரச கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2014இன் இறுதிக் காலாண்டில் ரூ.82.2 பில்லியனால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. 2014இன் பிற்பகுதியில் அரச மற்றும் தனியார் துறைக்கான கொடுகடன் மீளெழுச்சியுற்றமையின் காரணமாக 2014இன் இறுதிக் காலாண்டில் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் ரூ.300.6 பில்லியனால் அதிகரித்து 2014இன் நாணய விரிவாக்கத்திற்குப் பெருமளவிற்குப் பங்களித்தது.

**மத்திய வங்கியின் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலை மற்றும் உள்நாட்டுப் பணச் சந்தையில் காணப்பட்ட உயர்ந்த மிகையான திரவத்தன்மை என்பனவற்றுடன் தாழ்ந்த பணவீக்க எதிர்பார்ப்புக்களும் சேர்ந்து கொண்டமையின் காரணமாக 2014 காலப்பகுதியில் பெரும்பாலான சந்தைப் பிரிவுகளில் வட்டி வீதங்கள் வரலாற்றிலேயே மிகக் குறைந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்தன.** 2014 செத்தெம்பர் வரை கொள்கை வீத வீச்சிற்குள் தளம்பலுற்ற சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதங்கள் துணைநில் வைப்பு வசதியைப் பெறுவதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல்களைத் தொடர்ந்து துணைநில் வைப்பு வசதி வீதத்திற்கு கீழே வீழ்ச்சியடைந்தன. அதன் காரணமாக 2014 இறுதியில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் 2013 இறுதியின் 7.66 சதவீதத்திலிருந்து 6.21 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இது 145 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்டதொரு குறைவாகும். அதேவேளை, அரச பிணையங்களுடன் தொடர்பான விளைவு வீதங்களும் இவ்வாண்டுப் பகுதியில் மிகக் குறைந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்தன. கொள்கை வீதங்கள் சந்தை வட்டி வீதங்களாக மாற்றப்படுவதனைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், வர்த்தக வங்கிகள் அவற்றின் வைப்பு மற்றும் கடன் வழங்கல் வீதங்களை 2014ஆம் ஆண்டில் மேலும் குறைத்தன. இதன்படி, சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் 317 அடிப்படைப் புள்ளிகளினால் 6.20 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் 445 அடிப்படைப் புள்ளிகளினால் 2014 இறுதியில் 7.33 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதங்கள், வைப்பு வீதங்களிலும் பார்க்க மெதுவான வேகத்தில் 387 அடிப்படைப் புள்ளிகளினால் 2014 இறுதியில் வரலாற்றிலேயே மிகக் குறைந்த மட்டமான 6.26 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. மேலும், சராசரி நிறையேற்றப்பட்ட கடன்

வழங்கல் வீதம், கடன் வழங்கல் வீதங்களில் காணப்பட்ட தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்லும் போக்குடன் இசைந்துசெல்லும் விதத்தில் 2014 இறுதியில் 327 அடிப்படைப் புள்ளிகளினால் 11.91 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## நிதியியல் துறை அபிவிருத்திகள்

**நிதியியல் துறையானது, தொடர்ச்சியான விரிவாக்கம் மிக்க நாணயக் கொள்கை மற்றும் மேம்பட்ட பேரண்டப் பொருளாதாரச் செயலாற்றம் என்பனவற்றின் துணையுடன் பெரியளவில் ஏதேனும் பேரண்ட - முன்மதியுடைய கரிசனைகளோ அல்லது அதற்கான அறிகுறிகளோ இல்லாமல் 2014இல் மேம்பட்ட செயலாற்றத்தினைக் காட்டியது.**

**2014இல் வங்கித்தொழில் துறை முன்மதியுடைய விகிதமொன்றிற்குள் தொடர்ந்தும் விரிவடைந்தது.** வங்கித்தொழில் துறையின் மொத்த ஐந்தொகைச் சொத்துக்கள் ரூ.6,972 பில்லியனுக்கு 17.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு உள்நாட்டு தனியார் வங்கிகளின் ரூபாக் கடன் வழங்கல் நடவடிக்கைகளே முக்கிய காரணமாகும். வைப்புக்கள் நிதியிடலின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்கி 2014 இறுதியில் இத்துறையின் மொத்தப் பொறுப்புக்களில் 67.2 சதவீதத்திற்க வகைகூறியது. இத்துறையின் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகை ரூ.3,128 பில்லியனுக்கு 5.2 சதவீதத்தினால் அதிகரித்தது. துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மீதான வருவாய் என்பன 2013இன் முறையே 1.3 சதவீதம் மற்றும் 16.0 சதவீதத்திலிருந்து 2014இல் முறையே 1.4 சதவீதத்திற்கும் 16.5 சதவீதத்திற்கும் மேம்பட்டன. இத்துறையின் செயற்படாக் கடன்களின் மட்டம் வீழ்ச்சியடைந்து செயற்படாக் கடன்களின் விகிதம் 2013இன் 5.6 சதவீதத்திலிருந்து 4.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் சந்தை இடர்நேர்விற்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்ந்தும் 3 சதவீதத்திலோ அல்லது அதற்குக் குறைவாகவே காணப்பட்டன. முன்மதியுடைய தேவைப்பாடுகளைப் பொறுத்தவரையில், துறையானது மிகையான திரவத்தன்மையுடன் தொழிற்பட்டதுடன் அதன் விளைவாக நாணயத் துறை நிலைமைகள் மற்றும் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளின் நியதி திரவச்சொத்து விகிதம், குறைந்தபட்சத் தேவைப்பாடான 20 சதவீதத்திற்குகெதிராக ஏறத்தாழ 39 சதவீதத்திற்கும் கூடுதலாக இருந்ததுடன் மொத்த மூலதனப் போதுமை விகிதம் 2014 இறுதியில் ஏறத்தாழ 16.7 சதவீதமாக இருக்குமென மதிப்பிடப்பட்டது. பாசல் II இன் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்விற்கான நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் நடைமுறைப்படுத்தல், அசையாச் சொத்துக்களின் மதிப்பிடலுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு, தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கான வழிகாட்டல் மற்றும் 2016 இலிருந்து குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளை அதிகரித்தல் என்பன 2014இல் வங்கித்தொழில் துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட முன்மதியுடைய கொள்கைத் தேவைப்பாடுகளில் சிலவாகும்.

**நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை அண்மைய ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட வியாபார மற்றும் நிதியியல் அறவிடல் செயன்முறைகளினூடாக 2014இல் மேம்பட்டுவரும் செயலாற்றத்தினைக் காட்டின.** குறைந்த வட்டி வீத அமைப்பின் விளைவாக துறையின் மொத்தச் சொத்துக்கள் 2014இல் 18.9 சதவீதம் கொண்ட ஆரோக்கியமான வீதத்தில் வளர்ச்சியடைந்ததுடன் அத்தகைய வளர்ச்சிக்கு முக்கியமாக தாழ்ந்த செலவினைக் கொண்ட குறுங்கால வைப்புக்களே நிதியிட்டன. துறையின் சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குரிமை மீதான வருவாயும் 2013இன் முறையே 2.1 சதவீதம் மற்றும் 8.2 சதவீதத்திலிருந்து 2014இல் முறையே 3.0 சதவீதத்திற்கும் 13.1 சதவீதத்திற்கும் மேம்பட்டன. செயற்படாக் கடன்களின் அளவு ரூ.44.3 பில்லியனுக்கு 19.9 சதவீதத்தினால் அதிகரித்த போதும் செயற்படாக் கடன்களின் விகிதம் 2013இன் 6.7 சதவீதத்திலிருந்து 6.9 சதவீதத்திற்கு சிறிதளவால் மாத்திரம் அதிகரித்தது. இத்துறையின் சொத்துக்களும் பொறுப்புக்களும் தாழ்ந்த வட்டி வீத அமைப்பில் மீள்விலையிடல் செயன்முறைகளுக்கு உட்பட்டதன் காரணமாக தேறிய வட்டி அளவு 2013இன் 6.6 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்கு அதிகரித்தது. இத்துறையின் மொத்தச் சொத்துக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் 2014இல் 9.6 சதவீதத்திற்கு அதிகரித்து குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச திரவச் சொத்தான ரூ.52.8 பில்லியனுக்கெதிராக ரூ.29.5 பில்லியன் மிகையை உருவாக்கியது. இருப்பினும் கூட, மொத்த மூலதனப் போதுமை விகிதம் 2013இன் 14.8 சதவீதத்திலிருந்து 2014 இறுதியில் 13.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, குறைந்தபட்ச நியதித் தேவைப்பாட்டிற்கும் மேலாக இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் வளர்ச்சியடைந்தமையே காரணமாகும். இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் வங்கிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் என்பனவற்றினூடாக மேற்கொள்ளப்பட்ட நிதியியல் துறை ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டம் 2014இல் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் கொள்கையாகக் காணப்பட்டது. இதன்படி, நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் எண்ணிக்கையினை ஒழுங்குமுறைப்படுத்தல் உதவி மற்றும் வரி ஊக்குவிப்புக்கள் என்பனவற்றின் உதவியுடன் 58 இலிருந்து 20 இற்கு குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. 2014

இறுதியில் 10 இணைப்புக்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 22 செயற்பாட்டிலிருக்கின்றன. இச்செயன்முறையின் போது எழுப்பப்பட்ட பல்வேறு கரிசனைகளையும் கவனத்தில் கொண்டு, புதிய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவின் மீளாய்வினைத் தொடர்ந்து இந்நிகழ்ச்சித்திட்டமானது நிறுத்தி வைக்கப்பட்டது.

**தாழ்ந்த வட்டி வீதச் சூழலிலும் கூட, கூறுநம்பிக்கைகளும் ஓய்வூதிய நிதிகளும் 2014இல் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தன.** கூறுநம்பிக்கைகளின் மொத்த எண்ணிக்கை 10 இனால் 63 இற்கு அதிகரித்த வேளையில் துறையின் மொத்தச் சொத்துக்கள் 2014 இறுதியில் ரூ.126.5 பில்லியனுக்கு இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தன. ஓய்வூதிய நிதியங்கள் துறை 2014ஆம் ஆண்டில் ஆரோக்கியமான வளர்ச்சியைப் பேணின. 2014இல் ஏறத்தாழ 13 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த காப்புறுதித் துறை தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கக்கூடிய நிலையில் காணப்பட்டது. எல்லா நேரங்களிலும் ஒவ்வொரு நிதியத்திற்குமான கூறுஉடமையாளர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை தொடர்பில் அனைத்துக் கூறுநம்பிக்கைகளுக்கும், எந்தவொரு ஆரம்பப் பங்கு வழங்கலிலுமுள்ள கூறுஉடமையாளாகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை தொடர்பிலும் விடுக்கப்பட்ட பணிப்புரைகளே கூறுநம்பிக்கைகள் மீது நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் கொள்கைகளாகக் காணப்பட்டன. குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் செய்யப்பட்ட அதிகரிப்பு இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மூலதனப்போதுமைக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டமை, 2016 அளவில் காப்புறுதிக் கம்பனிகளைக் கட்டாயமாக பகிரங்கமாகப் பட்டியலிடல் என்பன காப்புறுதித் துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் கொள்கைகளாகக் காணப்பட்டன.

**2014ஆம் ஆண்டுப் பகுதியில் உள்நாட்டு நிதியியல் சந்தைகள் தொடர்ந்தும் திரவத்தன்மை கொண்டனவாகவும் சுறுசுறுப்பானவையாகவும் காணப்பட்டன.** உள்நாட்டு பணச் சந்தையில் மிகையான திரவத்தன்மை நிலைமைகள் காணப்பட்டமையின் விளைவாக, சந்தை வட்டி வீதங்களை கொள்கை வட்டி வீத வீச்சுடன் ஒத்துச் செல்லும் விதத்தில் சமநிலைப்படுத்தும் நோக்கத்தின் பொருட்டு அத்தகைய மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்காக, மத்திய வங்கி ஆண்டு முழுவதும் கிரமமான அடிப்படையில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேற்கொண்டது. இதன்படி, 2014இல் மத்திய வங்கியினால் ரூ.4,299 பில்லியன் பெறுமதியான மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களும் ரூ.4,340 பில்லியன் பெறுமதியான துணைநில் வைப்பு வசதிகளும் வழங்கப்பட்டன. குறைந்த வட்டி வீத சூழல் மற்றும் அதிகரித்த முதலீட்டாளர் நம்பிக்கை என்பனவற்றின் பயன் காரணமாக கொழும்பு பங்குச் சந்தை 2014இல் உறுதியான வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு 2014 நவெம்பரில் ரூ.3,205 பில்லியன் சந்தை மூலதனமயமாக்கலுடன் அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் 7,548 இனை அடைந்தமையே காரணமாக அமைந்தது. 2014 இறுதியில் அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் ரூ.3,105 சந்தை மூலதனமயமாக்கலுடன் 7,299 இனை அடைந்தது. மேலும், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்கேற்புடன் கொழும்பு பங்குச் சந்தை 2014இல் ஐ.அ.டொலர் 168 மில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சலைப் பதிவு செய்தது. கம்பனிப் படுகடன் முதலாந்தரச் சந்தையானது எண்ணிக்கை மற்றும் வழங்கல்களின் மொத்தப் பெறுமதி ஆகிய நியதிகளில் 2014இல் ஒப்பீட்டு அடிப்படையில் குறைந்த அளவினைப் பதிவு செய்தது. இதன்படி, 2013இல் பட்டியலிடப்பட்ட மொத்தமாக ரூ.69.1 பில்லியன் கொண்ட 83 பட்டியலிடப்பட்ட படுகடன் வழங்கல்களுடன் ஒப்பிடுகையில் 2014இல் மொத்தமாக ரூ.54.2 பில்லியன் கொண்ட 46 கம்பனிப் படுகடன் வழங்கல்கள் மட்டும் காணப்பட்டன. வர்த்தகப் பத்திரங்களுக்கான முதலாந்தரச் சந்தையும் 2014இல் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த செயலாற்றத்தினைக் கொண்டிருந்ததுடன் அத்தகைய வழங்கல்களின் மொத்தத் தொகை முன்னைய ஆண்டின் ரூ.28.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.8.2 பில்லியனாகக் காணப்பட்டன. முதலீடுகள் மற்றும் வர்த்தகம் என்பனவற்றினூடான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் மேம்பட்டமையின் காரணமாக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வர்த்தகப்படுத்தப்பட்ட அளவுகள் 2014இல் ஐ.அ.டொலர் 15,478 மில்லியனுக்கு 12.9 சதவீதத்தினால் அதிகரித்து, ஐ.அ.டொலருக்கெதிரான இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தம் வெளிநாட்டு ஒதுக்குகளின் உதவியுடன், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வழமையான தலையீடுகளின் மூலமாக சமநிலைப்படுத்தப்பட்டது.

**கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளைப் பொறுத்தவரையில், முறைமைகள் எந்தவொரு முக்கிய முறையியல் சார்ந்த இடர்நேர்வுமில்லாமல் அதிகரித்தளவிலான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள வசதிகளை வழங்கின.** லங்கா செட்டில் முறைமை மற்றும் காசோலை தீர்ப்பனவு முறைமை என்பன பாரிய மொத்தக் கொடுக்கல்வாங்கல் பெறுமதிக்கும் கொடுப்பனவுகளின் அளவிற்கும் தொடர்ந்தும் வகைகூறியது. 2014இல் தொழிற்பாட்டாளர் என்ற ரீதியில் லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டும் ஒழுங்குமுறைப்படுத்துநர் என்ற ரீதியில் மத்திய வங்கியும் கூட்டாகப் பொதுவான இலத்திரனியல் நிதியமாற்றல் ஆழியின் பூர்வாங்க வேலைகளை நிறைவு செய்ததுடன் பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியின் இரண்டாம் கட்டம் நிறைவு செய்யப்பட்டதுடன்

பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழிக்கான வங்கி உறுப்பினர்கள், 2,500 இற்கு மேற்பட்ட தன்னியக்கக் கூற்றுப் பொறி வலையமைப்பொன்றுடன் ஒன்பதிற்கு அதிகரித்தனர்.

## 1.3 உலகளாவிய பொருளாதாரச் சூழலும் தோற்றப்பாடும்

ப.நா.நிதியத்தின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின்படி, **2014இல் உலகளாவிய வளர்ச்சி ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் குறைவாக இருந்தமைக்கு முக்கிய பொருளாதாரங்களில் ஏற்பட்ட பிறழ்வுகளும் தோற்றம்பெற்றுவரும் பொருளாதாரங்களின் குறைந்தளவு வளர்ச்சி உத்வேகமும் காரணங்களாக அமைந்தன.** மிகையான இயலளவு முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களில் கணிசமான வெளியீட்டு இடைவெளிகளைத் தோற்றுவித்தமை பண்டங்களின் மேம்பட்ட உலகளாவிய நிரம்பல் மற்றும் நலிவடைந்த கேள்வி என்பனவற்றின் துணையுடன் தொடர்ச்சியாக சுருக்கமடைந்த விலை மட்டங்கள் என்பனவற்றின் காரணமாக 2014இல் உலகளாவிய பணவீக்கம் குறைந்ததொரு அளவில் காணப்பட்டது. 2014இல் உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் மிகக் குறைந்த மட்டத்தினை அடைந்தன. ஐ.அமெரிக்க பொருளாதாரத்தில் காணப்பட்ட வலுவான பொருளாதாரத் தோற்றப்பாட்டின் காரணமாக 2014ஆம் ஆண்டுப் பகுதியில் சில முன்னேற்றம் கண்ட மற்றும் தோற்றம்பெற்றுவரும் பொருளாதாரங்களின் நாணயங்கள் ஐ.அ.டொலருக்கெதிராக தேய்வடைந்தன.

**அட்டவணை 1.4 — உலகப் பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடும் (அ)**

| விடயம் | 2012 | 2013 | 2014 (மதிப்பீடுகள்) | 2015 (எறிவுகள்) |
|---|---|---|---|---|
| **உலக வெளியீடு** | **3.4** | **3.4** | **3.4** | **3.5** |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 1.2 | 1.4 | 1.8 | 2.4 |
| ஐக்கிய அமெரிக்கா | 2.3 | 2.2 | 2.4 | 3.1 |
| யூரோ பகுதி | -0.7 | -0.5 | 0.9 | 1.5 |
| ஐக்கிய இராச்சியம் | 0.3 | 1.7 | 2.6 | 2.7 |
| யப்பான் | 1.5 | 1.6 | -0.1 | 1.0 |
| தோற்றம்பெற்று வரும், அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் | 5.1 | 5.0 | 4.6 | 4.3 |
| அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியா | 6.7 | 7.0 | 6.8 | 6.6 |
| சீனா | 7.7 | 7.8 | 7.4 | 6.8 |
| இந்தியா | 4.7 | 6.9 | 7.2 | 7.5 |
| **உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்)** | **2.9** | **3.5** | **3.4** | **3.7** |
| இறக்குமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 1.2 | 2.1 | 3.3 | 3.3 |
| தோற்றம்பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 6.0 | 5.5 | 3.7 | 3.5 |
| ஏற்றுமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 2.0 | 3.1 | 3.3 | 3.2 |
| தோற்றம்பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 4.6 | 4.6 | 3.4 | 5.3 |
| **விலை அசைவுகள்** | | | | |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 2.0 | 1.4 | 1.4 | 0.4 |
| தோற்றம்பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 6.1 | 5.9 | 5.1 | 5.4 |
| பண்டங்களின் விலைகள் (ஐ.அ.டொ.) | | | | |
| எண்ணெய் | 1.0 | -0.9 | -7.5 | -39.6 |
| எரிபொருள் அல்லாதவை | -10.0 | -1.2 | -4.0 | -14.1 |
| **ஐ.அமெ.டொ. வைப்புக்கள் மீதான ஆறுமாத இலண்டன் வங்கிகளுக்கு இடையிலான வழங்கல் வீதம் (சதவீதம்)** | **0.7** | **0.4** | **0.3** | **0.7** |

(அ) வேறுவிதமாகக் குறிப்பிட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம்.

மூலம்: உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு (ஒத்தோபர் 2014 மற்றும் சனவரி 2015), ப.நா.நிதியம்

ப.நா.நிதியத்தின்படி, **உயர்ந்தளவு படுகடன் உயர்ந்தளவு தொழிலின்மை மற்றும் தாழ்ந்த முதலீடு என்பனவற்றின் காரணமாக உலகளாவிய வளர்ச்சி மிதமடையுமென எதிர்பார்க்கப்படும் வேளையில் ஐக்கிய அமெரிக்காவில் எதிர்பார்க்கப்படும் வட்டி வீத உயர்வும் சில முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களில் காணப்படும் தாழ்ந்த பணவீக்கமும் மேலதிகச் சவால்களைத் தோற்றுவித்து வருகின்றன.** இருப்பினும் கூட, முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களின் படிப்படியான மீட்சி, அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் காணப்பட்ட எதிர்மறையான போக்குகள் படிப்படியாக மறைந்து போகும் தன்மை மற்றும் எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சி என்பனவற்றின் துணையுடன் உலகளாவிய வளர்ச்சி 2015இல் 3.5 சதவீதத்தினாலும் 2016இல் 3.8 சதவீதத்தினாலும் உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களின் நுகர்வோர் விலைப் பணவீக்கம் 2015இல் 1 சதவீதத்திற்குக் கீழாக காணப்படுமென எதிர்பார்க்கப்பட்ட வேளையில் குறைவடைந்த பண்ட விலைகள் சில பிராந்தியங்களில் பணச் சுருக்க அச்சுறுத்தலை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. கணியம்சார் தளர்த்தல் வழிமுறைகளிலிருந்து கசிகின்ற தாக்கங்களிலிருந்து தோன்றுகின்ற சவால்களின் காரணமாக தோற்றம்பெற்றுவருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களின் நுகர்வோர் விலைப் பணவீக்கத்தில் சில அதிகரிப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

## 1.4 நடுத்தர கால பேரண்டப் பொருளாதாரத் தோற்றப்பாடு

**இலங்கையின் பொருளாதாரம் 2015இல் 7.0 சதவீதம் கொண்ட மிதமான பொருளாதார வளர்ச்சியுடனும் 2016 - 2018 காலப்பகுதியில் 7.8 சதவீதம் கொண்ட சராசரி வளர்ச்சியொன்றுடனும் நடுத்தர காலப்பகுதியில் உண்மை மொ.உ.உற்பத்தி வலுவான வளர்ச்சிப் பாதையொன்றினைப் பதிவு செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.** 2015இல் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார வளர்ச்சி மெதுவடைதலிற்கு குறிப்பாக முதல் காலாண்டுப் பகுதியில் தனிப்பட்ட முதலீட்டாளர்களின் பழமைவாய்ந்த மனோபாவங்கள் மற்றும் அரச துறைக் கட்டுமான நடவடிக்கைகள் மெதுவடைந்தமையே முக்கிய காரணங்களாகும். அதன் பின்னர் அரசாங்கத்தின் புதிய கொள்கை முன்னெடுப்புக்களினால் பொருளாதாரம் உயர்வடையுமென

எதிர்பார்க்கப்பட்டது. உள்நாட்டுக் கொள்கைக் கட்டமைப்பு, மேம்பட்ட முதலீட்டாளர் மனோபாவம் மற்றும் உலகளாவிய பொருளாதார நடவடிக்கையில் காணப்பட்ட மேம்பாடு என்பனவற்றிலிருந்து கிடைக்கும் வளர்ச்சி உதவிகளிலிருந்து கிடைக்கின்ற பயன்களின் காரணமாக நடுத்தர காலத்தில் உயர் வளர்ச்சி உத்வேகமொன்று எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து முக்கிய உற்பத்தித் துறைகளான வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் என்பன மேம்பட்ட தொழில்நுட்பத்தினை பின்பற்றுதல், அதிகரித்த மனித வளங்கள் மற்றும் தனியார் துறையின் புதிய முதலீட்டு முன்னெடுப்புக்கள் என்பவற்றால் உதவப்பட்டு உற்பத்தி இயலளவினூடாக பொருளாதார வளர்ச்சிக்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் மற்றும் நிதியியல் உட்பாய்ச்சல் என்பனவற்றை அதிகரிப்பதற்கான கொள்கை வழிமுறைகளை சரியான நேரத்தில் நடைமுறைக்கிடுவதன் மூலம் ஏற்படுத்தப்படக்கூடிய சாதகமான தாக்கங்கள் வெளிநாட்டுக் கேள்வியினால் மேம்பாடடைந்த இலங்கையின் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்குப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பணவீக்கத்தினை குறைந்த ஒற்றை இலக்க மட்டத்தில் பேணுவதனை கவனத்தில் கொண்டு நாணயக் கொள்கையினை மேற்கொள்ளுதல், வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினைக் குறைத்தல் மற்றும் அரச படுகடன் தோற்றப்பாட்டினை மேம்படுத்துதல் என்பனவற்றின் மூலம் இறைத்திரட்சிச் செயன்முறையினை மேம்படுத்துதல் என்பனவற்றுடன் கூடிய முன்மதியுடைய நாணய மற்றும் இறைக் கொள்கைகளும் நடுத்தர காலத்தில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சிப் பாதைக்கு உதவியாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை 2015இல் ஆண்டு நுகர்வோர் விலைப் பணவீக்கம் 3.0 சதவீதமாகவும் அதன் பின்னர், 4.0 சதவீதமாகவும் காணப்படுமென எறிவு செய்யப்பட்டதுடன், புதிய முதலீட்டு முன்னெடுப்புக்கள் மற்றும் முன்மதியுடைய நாணயக் கொள்கை வழிமுறைகள் என்பனவற்றினூடாக இயலளவு விரிவாக்கப்பட்டமையின் மூலம் உதவப்பட்டது.

**வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாடு நடுத்தர காலத்தில் அதன் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.** 2015இல் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடையுமெனவும் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டினை வலுப்படுத்துவதற்குப் பங்களிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்த எண்ணெய் விலைகளின் தாக்கம் காரணமாக 2015 காலப்பகுதியில் சுருக்கமடையுமென எறிவு செய்யப்பட்டுள்ள இறக்குமதிகளின் வளர்ச்சி, நுகர்வு, இடைநிலை மற்றும் முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதிகளுக்கான கேள்வியில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அடுத்தவரும் ஆண்டில் உயர்ந்த வீதமொன்றில்

அட்டவணை 1.5

நடுத்தரகால பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு (அ)

| குறிகாட்டி | அலகு | 2013 (ஆ) | 2014 (இ) | எறிவுகள் 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை** | | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 7.2 | 7.4 | 7.0 | 7.5 | 8.0 | 8.0 |
| சந்தை விலைகளில் மொ.உ.உ. | ரூ.பில் | 8,674 | 9,785 | 11,080 | 12,447 | 14,044 | 15,853 |
| ஆண்டுக்கான சராசரி பணவீக்கம் | % | 6.7 | 5.1 | 3.0 | 4.0 | 4.0 | 4.0 |
| தலைக்குரிய மொ.உ.உ. | ஐ.அ.டொ. | 3,280 | 3,625 | 4,009 | 4,469 | 4,997 | 5,624 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ. இன் % | 29.5 | 29.7 | 28.0 | 30.0 | 31.0 | 32.5 |
| உள்நாட்டு சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 20.0 | 21.1 | 22.3 | 24.2 | 25.8 | 27.7 |
| தேசிய சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 25.8 | 27.0 | 27.0 | 28.6 | 30.0 | 31.5 |
| **வெளிநாட்டுத் துறை** | | | | | | | |
| வர்த்தக இடைவெளி | மொ.உ.உ. இன் % | -11.3 | -11.1 | -7.8 | -8.1 | -7.6 | -7.1 |
| ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ. மில் | 10,394 | 11,130 | 12,217 | 13,307 | 14,331 | 15,429 |
| இறக்குமதிகள் | ஐ.அ.டொ. மில் | 18,003 | 19,417 | 18,787 | 20,958 | 22,457 | 24,047 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | மொ.உ.உ.இன் % | -3.8 | -2.7 | -1.0 | -1.4 | -1.0 | -1.0 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | இறக்குமதி மாதங்கள் | 5.0 | 5.1 | 6.2 | 5.2 | 5.0 | 5.0 |
| **இறைத்துறை** | | | | | | | |
| மொத்த அரசிறை மற்றும் கொடைகள் | மொ.உ.உ.இன் % | 13.3 | 12.3 | 13.6 | 14.0 | 14.7 | 14.9 |
| செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | மொ.உ.உ.இன் % | 19.2 | 18.3 | 18.0 | 18.2 | 18.7 | 18.7 |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ.இன் % | -0.8 | -1.3 | -0.4 | 0.4 | 1.1 | 1.3 |
| திரண்ட வரவு செலவு திட்டப் பற்றாக்குறை | மொ.உ.உ.இன் % | -5.9 | -6.0 | -4.4 | -4.2 | -4.0 | -3.8 |
| அரச படுகடன் | மொ.உ.உ.இன் % | 78.3 | 75.5 | 72.0 | 69.0 | 66.0 | 63.0 |
| **நிதியியல் துறை (ஈ)** | | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) | % | 16.7 | 13.4 | 12.0 | 12.5 | 13.0 | 13.0 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி | % | 7.5 | 8.8 | 15.5 | 15.0 | 15.0 | 15.0 |

(அ) 2015 மாச்சு மாத நடுப்பகுதியில் கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) ஆண்டு இறுதிப் பெறுமதிகளின் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

வளர்ச்சியடையக்கூடும். எனினும், வர்த்தக நிலுவை, ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த ஏற்றுமதி வருவாய்களின் காரணமாக நடுத்தர காலப்பகுதியில் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான உட்பாய்ச்சல்கள் குறிப்பாக, சுற்றுலா, தொலைத் தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள் என்பனவற்றிலிருந்தான வருவாய்களில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்களுடன் நடுத்தர காலப்பகுதியில் தொடர்ந்தும் ஆரோக்கியமான வளர்ச்சியைப் பதிவு செய்யும். நாட்டின் வெளிநாட்டுச் செலாவணியின் உட்பாய்ச்சல்களுக்கு குறிப்பிடத்தக்களவில் பங்களிக்கின்ற தொழிலாளர் பணவனுப்பல்கள் உள்நாட்டில் அதிகரித்த தொழில் வாய்ப்புக்கள் காரணமாக ஏற்படக்கூடிய மெதுவான வேகத்திற்கு மத்தியிலும் அதன் வளர்ச்சியைத் தொடருமென எறிவு செய்யப்பட்டுள்ளது.

**தலைக்குரிய மொ.உ.உற்பத்தி நியதிகளில் இலங்கை மேல் நடுத்தர வருமான அந்தஸ்திற்கு இலங்கை உயர்த்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதானது நாட்டினை புதியதொரு நாடுகளிடையே விளங்கச் செய்து அதன் நிதியியல் ஆற்றலையும் வலுப்படுத்துகிறது.** மேலும், முதலீட்டுச் சூழலில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றங்கள் அபிவிருத்தியடைந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் சேர்ந்து நாட்டிற்கான முதலீட்டு உட்பாய்ச்சலை ஊக்கவிக்கும். இதன்படி, பங்குரிமை மூலதனம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு என்பனவற்றின் வடிவங்களில் முதலீட்டு உட்பாய்ச்சல்கள், நடுத்தர காலத்தில் அதிகரிக்குமென எறிவு செய்யப்பட்டுள்ளது. வங்கித்தொழில் துறை மற்றும் ஏனைய கம்பனிகள் பன்னாட்டுப் படுகடன் மற்றும் மூலதனச் சந்தைகளிலிருந்து நிதி வசதிகளை தொடர்ந்து பெறுமென எதிர்பார்க்கப்பட்ட போதும்

**நடுத்தர காலத்தில் நாணயக் கொள்கை நடத்தையானது பணவீக்கத்தினைச் சராசரியாக 3-5 சதவீதத்தில் பேணுவதனை இலக்காகக் கொண்டிருந்த வேளையில் பொருளாதார நடவடிக்கை விரிவடைவதற்கும் வசதியளித்தது.** முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளை, முக்கியமாகப் பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பனவற்றை முக்கிய கவனத்தில் கொண்டு நாணயக் கொள்கை கட்டமைப்பு, நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடல் அமைப்புடன் அதிகரித்தளவில் இணைக்கப்படுகின்ற வேளையில், விரிந்த பணம் நாணயக் கொள்கையை மேற்கொள்வதற்கு வழிகாட்டியாக முக்கிய எடுத்துக்காட்டல் மாறியாக விளங்கும். நடுத்தர காலத்தில் நாணயக் கொள்கைக் கருவிகளைக் குறிப்பாக, மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீச்சினைப் பொருத்தமான விதத்தில் சீராக்குவதன் மூலமும் வங்கிகளுக்கிடையிலான ஓரிரவு வட்டி வீத இலக்கினைத் தொழிற்படுத்துவதற்கு உதவியளித்தல் மூலம் பணவீக்கம் சராசரியாக விரும்பத்தக்க 3-5 சதவீதத்தில் பேணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. விரிந்த பணத்தின் வளர்ச்சிக்கு முக்கிய தூண்டுதலாக விளங்கும் தனியார் துறைக்கான வர்த்தக வங்கிகளின் கொடுகடன் வளர்ச்சி 2015இல் ஏறத்தாழ 15.5 சதவீதத்தில் எறிவுசெய்யப்பட்டு அதன் பின்னர் ஏறத்தாழ 15.0 சதவீதத்தில் சமநிலையடையுமென எதிர்பார்க்கப்பட்டது. இதற்கு, ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்த சந்தை வட்டி வீதங்கள் மற்றும் முதலீட்டுச் சூழலில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்கள் மூலம் வசதியளிக்கப்படும். நடுத்தர காலத்தில் தனியார் துறைக்கான கொடுகடன் உறுதியாக அதிகரிக்குமென எறிவு செய்யப்பட்டுள்ளமைக்கு அரச அரசிறைச் சேகரிப்புக்களை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள், அரச செலவினங்களின் சிக்கனம் மற்றும் அரசாங்கம் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வங்கி நிதியிடலுக்கான தேவையைக் குறைத்துவிடக்கூடிய அரச கூட்டுத்தாபனங்களுக்கான செலவினைப் பிரதிபலிக்கின்ற தீர்வை அமைப்பு என்பன பக்கபலமாக விளங்கும். அதேவேளை, நடுத்தர காலத்தில் உயர்ந்த வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்படுகின்றமையினால் அத்தகைய உட்பாய்ச்சல்கள் பணநிரம்பலின் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தினைத் தடுப்பதற்கான பொருத்தமான கொள்கை வழிமுறைகள் சந்தைத் திரவத்தன்மையினையும் நடுத்தர காலப் பணவீக்கப் பாதையுடன் இசைந்துசெல்லும் விதத்தில் உள்நாட்டு வட்டி வீதங்களையும் கட்டுப்படுத்த உதவும்.

**வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினைக் குறைத்தல் மற்றும் அரச படுகடன் தோற்றப்பாட்டினை மேம்படுத்துதல் என்பனவற்றின் மூலம் இறைத்திரட்சிச் செயன்முறையினை மேலும் பலப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் நடுத்தரகால இறை உபாயம் வடிவமைக்கப்பட்ட வேளையில் விரைவுபடுத்தப்பட்ட பிரதேச ரீதியாக சமச்சீரான பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்காக தூண்டுதலளிக்கும் சூழல் உருவாக்கப்படுகிறது.** ஆண்டின் பிற்பகுதியில் மோசமான வானிலை நிலைமைகள் மற்றும் அரசிறைச் சேகரிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக செலவுகள் உட்பட திட்டமிடப்படாத செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக இறைத் திரட்சிச் செயலாற்றம் 2014இல் ஓரளவு தடங்கலுற்றுள்ளது. எனினும், அரசாங்கத்தினால் எடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற புதிய கொள்கை நடவடிக்கைகளுடன் நடுத்தர காலத்தில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்கறை மொ.உ.உற்பத்தியின் 4 சதவீதத்திற்கும் கீழே குறைவடைவதுடன் நாட்டின் வரவு செலவுத்திட்ட நிலைமை மேம்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. நடுத்தர காலத்தில் அரசிறை மிகையொன்றினை உருவாக்குவதற்காக வரி விலக்கல்களை ஒழுங்குமுறைப்படுத்தல், வரி இணங்குவிப்புக்களையும் வரி நிருவாகத்தினையும் மேம்படுத்தல் என்பனவற்றின் மூலம் அரச அரசிறையினை மொ.உ.உற்பத்தியின் 15 சதவீதத்திற்கு மேலாக உயர்த்தும் விதத்தில் வழிமுறைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## சிறப்புக்குறிப்பு 1


## இலங்கையில் வரி வருமானத்தை அதிகரித்தல் - சவால்களும் கொள்கைகளும்

இறைத்திரட்சி தொடர்பான அரசின் முயற்சிகள் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை ஓரளவிற்கு கட்டுப்படுத்தியிருக்கின்றமைக்கிடையிலும் (வரைபடம் சி.கு 1.1) அரசின் அரசிறையில் ஏற்பட்டுவரும் அதிகரிப்பு வீதம், நாட்டின் பெயரளவு வருமானத்தின் வளர்ச்சியிலும் பார்க்க மெதுவானதாக இருந்துவருவது இலங்கையின் இறை முகாமைத்துவத்தின் மீது அச்சுறுத்தலை அதிகரித்து வருகிறது. 1978இல் மொ.உ.உற்பத்தியின் 27.4 சதவீதமாக விளங்கிய மொத்த அரச அரசிறை, சில தளம்பல்களுக்கிடையிலும் 2014இல் மொ.உ.உற்பத்தியின் 12.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. இவற்றில், அரசாங்கத்திற்கான[1] அரசிறை வரி முக்கிய மூலமாக கருதப்படுகின்ற வரி அரசிறை 1978இன் மொ.உ.உற்பத்தியின் 24.2 சதவீதத்திலிருந்து 2014இல் மொ.உ.உற்பத்தியின் 10.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருக்கிறது (வரைபடம் சி.கு 1.2). மொத்த வரி அரசிறையின் பங்காக இலங்கையில் நேர் வரிகள் வரலாற்றிலேயே மிகக் குறைந்தளவான ஏறத்தாழ 20 சதவீதத்தில் (வரைபடம் சி.கு 1.3) காணப்பட்ட வேளையில் கம்பனியல்லா வருமான வரிகள் (உழைக்கும் பொழுதே செலுத்தும் வரி உட்பட) 2014இன் மொத்த நேரடி வரிச் சேகரிப்பில் 15 சதவீதத்திற்கு மாத்திரம் வகைகூறியது. தற்பொழுதுள்ள மறைமுக வரிகளில் பெறுமதிசேர் வரி முனைப்புக் கொண்டதாக விளங்கிய போதும் 2014இல் பெறுமதிசேர் வரிச் சேகரிப்பின் ஆண்டு வளர்ச்சி 9.8 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது. இலங்கையின் மொ.உ.உற்பத்திக்கான வரி அரசிறையின் விகிதம் தென்னாசிய அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில்[2] பெறும் வேறுபாடுகளைக் கொண்டிராத போதும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு நாடுகளின்[3] ஏறத்தாழ 36 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்விகிதம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

வரி விதிப்புத் தொடர்பில் இரண்டு அரச ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. முதலாவது ஆணைக்குழு முனைவர் எச்.எஸ். வனசிங்க அவர்களின் தலைமையில் 1989இலும் இரண்டாவது பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன் அவர்களின் தலைமையில் 2009 இலும் நியமிக்கப்பட்டன. இவை வரி அரசிறைகள் ஆழமாக வீழ்ச்சியடைவதுடன் தொடர்பான பிரச்சனையை ஆராய்ந்து நிலைமைய முன்னேற்றுவதற்கான விதந்துரைப்புக்களைச் செய்தன. இவ்வாணைக் குழுக்களின் விதந்துரைப்புக்களின் அடிப்படையில் வழிமுறைகளை


1. அரசிறைக் குறிக்கோள்களுக்குப் புறம்பாக, அரசாங்கம் வரி விதிப்பினை வருமான ஏற்றத்தாழ்வுகளைக் கட்டுப்படுத்தவும் பொருளாதார நடவடிக்கைகளை சமநிலைப்படுத்தவும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் முதலீட்டுப் பாய்ச்சல்களுக்கு வழிகாட்டவும் பயன்படுத்தக்கூடும். இவ்வேறுபட்ட குறிக்கோள்களை அடையும் விதத்தில் சிறந்த வரி முறைமையானது பொருளாதாரத்தில் காணப்படும் வினைத்திறன் இழப்புக்களைக் குறைக்குமென எதிர்பார்க்கின்ற வேளையில் நியாயமானதன்மை, இலகுவானதன்மை மற்றும் சேகரிப்புக்களை இலகுபடுத்தல் என்பனவற்றையும் உறுதிப்படுத்துகிறது.
2. Revenue Mobilisation in South Asia: Policy Challenges and Recommendations, Global Economic Prospects, World Bank, 2015.
3. Addressing Tax Evasion and Tax Avoidance in Developing Countries, Deutsche Gesellschaft fur Internationale Zusammenarbeit (GIZ), 2010.

**வரைபடம் சி.கு. 1.1 — மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக ஒட்டுமொத்த இறைப் பற்றாக்குறை**




இலகுபடுத்தவும் வரித் தளத்தினை விரிவாக்கவும் வரி இணங்குவிப்புக்களை மேம்படுத்தவும் காலத்திற்குக் காலம் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும், மொ.உ.உற்பத்திக்கான மொத்த அரச அரசிறை விகிதத்தினதும் அதேபோன்று மொ.உ.உற்பத்திக்கான வரி அரசிறை விகிதத்தினதும் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்குத் தொடர்ந்தது. பன்னாட்டு நாணய நிதியமும் 2014 செத்தெம்பரில் "வீழ்ச்சியடைந்துவரும் வரி அரசிறையைக் கட்டுப்படுத்தி அதனை மாற்றியமைக்க வேண்டியதன் தேவையை அலுவலர்களும் அதிகாரிகளும் அங்கீகரித்திருக்கின்றனர் (.......) எனப் பதிவு செய்திருக்கிறது. வரி அரசிறையை குறிப்பிடத்தக்களவிற்கு உத்வேகப்படுத்தாமல் நீண்ட காலம் நிலைக்கக்கூடிய இறைத்திரட்சியை எய்தமுடியாது. உயர்வானதும் உறுதியானதுமான உட்கட்டமைப்புச் செலவிடலையும் பொதுப்படுகடனில் உறுதியான குறைப்பினையும் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தினைக் கருத்திற் கொண்டு, வரி அரசிறையை மீண்டும் மேல் நோக்கி பயணிக்க வைப்பது இன்றியமையாதது என்பதுடன் இது பரந்த பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்திலும்


**வரைபடம் சி.கு. 1.2 — மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வரி வருமானம்**




1

பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

**வரைபடம் சி.கு 1.3 மொத்த வரி வருமானத்தில் நேரடி மற்றும் மறைமுக வரிகளின் பங்கு**




நம்பிக்கையை உருவாக்கும்"[4] இந்நிலைமையினை மேம்படுத்துவதற்கான தேவையினைப் பரிசீலனையில், மொ.உ.உற்பத்தியின் விகிதமாக வரி அரசிறை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைவதற்கான காரணங்களும் பின்பற்றப்படக்கூடிய சாத்தியமான கொள்கை வழிமுறைகளும் கீழே சுருக்கமாக ஆராயப்படுகின்றன.

**அண்மைக் காலத்தில் மொ.உ.உற்பத்தியின் விகிதமாக இலங்கையின் வரி அரசிறை ஏன் வீழ்ச்சியடைந்து வருகின்றது?**

கடந்த ஒரு சில தசாப்தங்களாக மொ.உ.உற்பத்தியின் விகிதமாக இலங்கையின் வரி அரசிறை வீழ்ச்சியடைவதற்கு பின்வருவன காரணங்களாக இருக்கலாம்:

1. பொருளாதார நடவடிக்கையினை ஊக்குவிப்பதற்காகப் பின்பற்றப்பட்ட ஏதேச்சையான தாக்கங்களைக் கொண்ட கொள்கைகள்:

   அ. தாராளமயப்படுத்தப்பட்ட காலத்திற்குப் பின்னர் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, வர்த்தகத்துடன் தொடர்பான வரிகள் குறைக்கப்பட்டன. குறிப்பாக, உலக வர்த்தக அமைப்புடன் கையொப்பமிட்டமையின் விளைவாக, தீர்வையை அடிப்படையாகக் கொண்ட பல தடைகள் தளர்த்தப்பட்டன. இலங்கை உட்பட தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்கள் பலவும் வருமான வரிகளிலும் பார்க்க வர்த்தகம் தொடர்பான வரிகளில் தங்கியிருப்பதற்கு நாட்டம் கொண்டமையினால் தீர்வைக் குறைப்புக்களைக் கொண்ட இப்பொதுவான போக்கு தோற்றம்பெற்று வருகின்ற சந்தைப் பொருளாதாரங்களின் திரண்ட வரி அரசிறையில் வீழ்ச்சியொன்றினைத் தோற்றுவித்தது[5].

   ஆ) ஏற்றுமதிச் சந்தை வளர்ச்சிக் கொள்கைகளின் கீழ் (அண்மைக் காலமாகக் காணப்படும் பணிகளின் ஏற்றுமதி உட்பட) மிக அவசியமான வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்காக வரி விலக்கல்கள் வழங்கப்பட்டுள்ளன. சில விலக்கல்கள் நீண்ட காலப்பகுதிக்கும் முன்னுரிமையல்லாத துறைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்காக வழங்கப்பட்டுள்ள வரி ஊக்குவிப்புக்களை பல்தேசிய கம்பனிகள் தவறாகப் பயன்படுத்தி இலாபங்களைக் கொண்டு சென்று வருவதனால் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அடிக்கடி பாதிக்கப்படுகின்றன என்பது நன்கு அறிந்த விடயமாகும்[6].

   இ) பொதுவாக, தாழ்ந்த வரிகள் பொருளாதார வளர்ச்சியை[7] தூண்டுவனவாகக் கருதப்படுவதனால், வரித் தளத்தினை அதிகரிக்காமல் வரி வீதங்களைக் குறைக்கும் போக்கு காணப்படுகிறது.

2 அரசாங்கத்தின் குறுகிய கால காசுப்பாய்ச்சல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக வரி முறைமையில் அவ்வப்பொழுது செய்யப்படும் மாற்றங்கள் நிலையான கொள்கைகளைப் பாதிப்பதுடன் ஏற்கனவேயுள்ள அல்லது இனிமேல் வரக்கூடிய வரி செலுத்துவோர்களிடையே நிச்சயமற்ற தன்மையினையும் ஏற்படுத்துகிறது. இது வரி முறைமையை மேலும் சிக்கலாக்குகிறது.

3. பெருமளவு முறைசாரா பொருளாதாரம் காணப்படுவதும் வரி ஏய்ப்பு மற்றும் வரித் தவிர்ப்பினைத் தோற்றுவித்து, மொ.உ.உற்பத்தி விகிதத்திற்கான வரி அரசிறை வீழ்ச்சியடைவதற்குப் பங்களித்தது. ஸ்நெய்டர் மற்றும் பூண் (2009) ஆகியோர் 1999 - 2006 காலப்பகுதியில் இலங்கையின் நிழல் பொருளாதார நடவடிக்கைகள் சராசரியாக மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ 45 சதவீதமாக இருந்ததாக மதிப்பிடுகின்றனர். 120 முன்னேற்றம்கண்ட மற்றும் அபிவிருத்திப் பொருளாதாரங்கள் தொடர்பான அவர்களின் கணிப்புக்களின்படி, நிழல் பொருளாதாரத்தின் அளவு ஐக்கிய நாடுகள் மற்றும் யப்பான் போன்ற முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களில் 7-8 சதவீதம் பொலிவியாவில் ஏறத்தாழ 70 சதவீதமாகவும் காணப்படுவதாக மதிப்பிட்டிருக்கின்றனர்[8].

4 நிருவாக வினைத்திறனிற்கமையும் வரிச் சேகரிப்பு மெதுவடையக் காரணமாகவிருக்கிறது. இவை, சிக்கலான வரிச் சட்டங்கள் மற்றும் இலகுபடுத்துவதற்கான முயற்சிகள்

4. Sri Lanka: First Post-Program Monitoring Discussion, International Monetary Fund Country Report No. 14/289, 2014.


5. Zee, Howell H., Empirics of Crosscountry Tax Revenue Comparisons, World Development, 24(10). Pp. 1659-1671, 1996.

6. Addressing Tax Evasion and Tax Avoidance in Developing Countries, Deutsche Gesellschaft fur Internationale Zusammenarbeit (GIZ), 2010.

7. Using a cross-section data set of 70 countries including Sri Lanka for the period 1970-1997, Lee and Gordon (2005) find that cutting the corporate tax rate by 10 percentage points can increase the annual growth rate by around 1.1 per cent (Lee, Y.and Gordon, R.H., Tax Structure and Economic Growth, Journal of Public Economics, 89, pp. 1027-1043, 2005).


8. Schneider F., and Buehn, A., Shadow Economies and Corruption all over the World: Revised Estimates for 120 Countries, 2009.

**வரைபடம் சி.கு. 1.4** **நேரடி வரி வருமானம்**




மூலம்: தென்னாசியாவில் வருமானத்தை திரட்டல்: கொள்கை சவால்களும் முன்மொழிவுகளும், உலக பொருளாதார தோற்றப்பாடு, உலக வங்கி, 2015

**வரைபடம் சி.கு. 1.5** **மறைமுக வரி வருமானம்**




மூலம்: தென்னாசியாவில் வருமானத்தை திரட்டல்: கொள்கை சவால்களும் முன்மொழிவுகளும், உலக பொருளாதார தோற்றப்பாடு, உலக வங்கி, 2015

காணப்படுகின்றமைக்கிடையிலும் பெருமளவான வரிகள் தற்பொழுதும் காணப்படுகின்றமை, அதேபோன்று வரிகளின் கொடுப்பனவு தொடர்பில் காணப்படும் கட்டுக்கடங்காத செயன்முறைகள் மற்றும் தற்றுணிபு நடவடிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

5 நாடு மேல் மத்திய தர வருமான வகையினை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றமைக்கு மத்தியிலும் கூட வரிச் செலுத்துவது தொடர்பில் கம்பனித் துறை உட்பட பொதுமக்களின் மனோபாவத்தினை மாற்ற இயலளவில் இருப்பதும் வரி அரசிறையினைப் பிரதிபலிக்கின்றது.

6 எம்றன் மற்றும் ஸ்ரிக்கிளிட்ஸ் (2005) ஆகியோரினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, அண்மைக் காலங்களிலும் காணப்படும் கணனி வழி அதேநேரக் கொள்வனவுகள் உட்பட எல்லைகடந்த சந்தைப்படுத்தல் முறைகள் அதிகரித்துவருவதும் வரி அரசிறையின் மீது சில தாக்கங்களைக் கொண்டிருக்கின்றன[9].

**இலங்கையில் வரி வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகள்**

இலங்கையில் வரி அரசிறையின் அதிகரிப்பதற்கான கொள்கைள் மேலே எடுத்துக்காட்டப்பட்ட பிரச்சனைகளைக் கட்டுப்படுத்த வேண்டியிருக்கின்ற வேளையில் வரி விதிப்பின் மீதான 2009 சனாதிபதி ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட விதந்துரைப்புக்களையும் ஏனைய நாடுகளின் அனுபவங்களையும் அதேபோன்று வரி விதிப்பின் அடிப்படைத் தத்துவங்களையும் பரிசீலனையில் கொள்ள வேண்டும். இக்கொள்கைகளில் சில கீழே சுருக்கித் தரப்படுகின்றன:

1. **இலகுபடுத்தல்:** வரி முறைமையினை இலகுபடுத்துவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் தற்போதுள்ள மட்டத்தை குறைந்தபட்சம் அரைவாசியாகக் குறைக்கும் விதத்தில் வரிகளினதும் தீர்வைகளினதும் எண்ணிக்கையினைக் குறைப்பதன் மூலம் வரி அமைப்பினை மேலும் ஒழுங்குமுறைப்படுத்துவது அவசியமாகும். எனினும் வரி அரசிறையில் மேலும் குறைப்புக்களை ஏற்படுத்தாத விதத்தில் வரிகளை ஒன்றிணைப்பதும் அவற்றை ஒழிப்பதும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2. **நேரடி வரி விதிப்பு எதிர் மறைமுக வரி விதிப்பு:** நேரடி வரி விதிப்பின் முக்கியத்துவம் வருமானமட்ட உயர்வினை அதிகரிப்பதாக இருத்தல் வேண்டும். சென் குப்தா (2007) நாடுகள் அவற்றின் வரி அரசிறையின் பிரதான மூலமாக பொருட்கள் மற்றும் பணிகளின் வரி விதிப்பின் மீது தங்கியுள்ளமையானது மோசமான வரி அரசிறைச் செயலாற்றத்திற்கு வழிவகுக்கிறது. மறுபுறத்தில், வரி விதிப்பு வருமானம், இலாபம், மூலதன இலாபம் என்பனவற்றின் மீது பாரிய வலியுறுத்தல்களைக் கொண்ட நாடுகள் சிறந்த செயலாற்றத்தினையும் கொண்டுள்ளன" எனக் குறிப்பிடுகிறார்[10]. இத்தகைய மாற்றமானது இலங்கையில் இன்னமும் இடம்பெறவில்லை என்பதுடன் (பார்க்க வரைபடம் சி.கு 1.4 மற்றும் சி.கு 1.5) நேரடி வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் குடித்தொகையில் 5 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்படுகின்றனர்[11]. மேலும், கம்பனித் துறையில் வரி இணங்குவிப்பு (செலுத்தப்பட வேண்டிய திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள்) 2012/13 வரி மதிப்பீட்டாண்டில் ஏறத்தாழ 70 சதவீதமாகக் காணப்பட்ட வேளையில் கம்பனியல்லாத் துறையில் இது ஏறத்தாழ 54 சதவீதமாகக் காணப்பட்டது. இவை வரித் தளத்தினை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தினையும் இணங்குவிப்பினையம் பிரதிபலித்த வேளையில், வரி ஏய்ப்பினை குறிப்பாக,

9. Emran, M.S., and Stiglitz, J.E., On Selective Indirect Tax Reform in Developing Countries, Journal of Public Economics 89, pp. 599-623, 2005.

10. Sen Gupta, A., Determinants of Tax Revenue Efforts in Developing Countries, International Monetary Fund, WP/07/184, 2007.

11. Revenue Mobilisation in South Asia: Policy Challenges and Recommendations, Global Economic Prospects, World Bank, 2015.

உயர்ந்த வருமானத்தினை உழைக்கின்ற கம்பனிகள் மற்றும் தனிப்பட்டவர்கள் மேற்கொள்வதனைக் குறைக்கும் நோக்குடனும் முழுமையாகவே வலைக்கு வரி வெளியேயுள்ளவர்களை அடையாளம் காணும் நோக்குடனும் வரி மதிப்பீட்டு முறையியல்களை மேம்படுத்துதல் வேண்டும். மறைமுக வரி விதிப்பினைப் பொறுத்தவரையில், சேகரிப்பு வினைத்திறன் மற்றும் விலக்கல்களினூடான கசிவுகள் மற்றும் மோசடிகள் என்பன கட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

3. **விலக்களிப்பு நடவடிக்கைகள்:** வேறுபட்ட வரிகளின் கீழ் காலத்திற்குக் காலம் பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட விலக்கல்கள், அத்தகைய விலக்கல்களுக்கான தேவையினை அங்கீகரிக்கும் விதத்தில் மீள ஆராயப்படுதல் வேண்டும். விலக்கல்கள் தவிர, பல்வேறு துறைகளையும் ஊக்குவிப்பதற்காக வழங்கப்பட்ட பல்வேறு வகையான சலுகைகளையும் அவை தற்போதைய முன்னுரிமைகளுடன் இசைந்து செல்கின்றமை என்பதனை அடையாளம் கண்டு உறுதிப்படுத்தும் விதத்தில் மீள ஆராயப்படுவது அவசியமாகும்.

4. **வரி நிருவாகம்:** வரிச் சேகரிப்பு முகவர்களின் நிருவாகம் மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறைகளை, குறிப்பாக, தொழில்நுட்பங்களை மேலும் அபிவிருத்தி செய்தல் மற்றும் தன்னியக்க நடவடிக்கைகளை விரைவுபடுத்தல் என்பனவற்றினூடாக வலுப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். வரிச் சட்டவாக்கம், ஆவணப்படுத்தல்கள் மற்றும் வரிக் கொடுப்பனவு முறைமைகள் என்பனவற்றை உள்ளடக்கிய வரி முறைகளின் இலகுபடுத்தல், அதேபோன்று பிணக்குகள் தீர்வுப் பொறிமுறையினை விரைவுபடுத்தல் என்பன அரசிறைச் சேகரிப்புக்களையும் அதேபோன்று இலங்கையில் வியாபாரத்தினை மேற்கொள்ளும் தரமிடல்[12] இனையும் மேம்படுத்தும். வரி நிருவாகம், வங்கிக் கணக்குகள் போன்ற முறைசார்ந்த கொடுப்பனவு வழிமுறைகளின் பயன்பாட்டிற்குத் தடைகளை ஏற்படுத்தும் தேவையற்ற தொல்லை கொடுக்கும் வரிகளை அகற்றுவதன் மூலம் நன்மையளிக்கும். அதேவேளையில் காசுக் கொடுப்பனவுகளை ஊக்குவித்து முறைசார்ந்த பொருளாதாரத்தினை மேலும் விரிவாக்கும்.

12. In Sri Lanka's Doing Business ranking, "Paying Taxes" sub rank was recorded at 158 in 2015. Although it is an improvement compared to the rank of 167 in 2014, such low ranking highlight the need for major reform in this area.

**தற்போது காணப்படுகின்ற வரி முறைமையானது மொத்த வரி வருமானத்தின் சேகரிப்புக்கு நேரடி வரியின் பங்களிப்பை அதிகரிக்கின்ற அதேவேளை மறைமுக வரிகளின் பங்களிப்பை குறைக்கும் வகையில் மீள்கட்டமைக்கப்படவுள்ளதுடன் அதனூடாக வரிமுறைமையை மிகவும் செயற்பாடுடைய செய்வதற்கு மாற்றியமைக்கும்.** மேலும், மீண்டெழும் செலவினத்தினை சிக்கனப்படுத்துவது அரச முதலீடுகளை உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்கு அரசாங்கத்திற்கு மேலும் வசதிகளை வழங்கும் போல் தோன்றுகிறது. திரண்ட இறைப் பற்றாக்குறையில் குறைப்புடன் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டு நிதியிடல் நடுத்தர காலத்தில் தளர்வடையுமென எதிர்பார்க்கப்படுவதன் மூலம் அதிக வளங்களை தனியார் துறைக்கு வழங்குவதுடன் சந்தை வட்டி வீதங்கள் மீதான அழுத்தங்கள் மேலும் குறைவடையச் செய்யும். கடந்த அண்மைக் காலத்தில் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் ஐந்தொகையினை வலுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள், நடுத்தர காலத்தில் அரச வரவு செலவுத்திட்டத்தின் மீதான சுமை குறைவடையுமென என எதிர்பார்பாக்கப்படுகிறது. நிதியிடல் செலவினைக் குறைப்பதற்காக மிகப் பொருத்தமான விதத்தில் கலப்பு நிதியிடல் மூலங்களைப் பயன்படுத்துவதுன் மீது கவனம் செலுத்துவதற்கு அரசாங்கத்தின் படுகடன் முகாமைத்துவ உபாயங்கள் எதிர்பார்க்கின்ற வேளையில், இடர்நேர்வுகள் இயன்றவரை குறைக்கப்படும். மேலும், அரச படுகடன் முகாமைத்துவ உபாயங்கள் படுகடன் இருப்புக்களின் சராசரி முதிர்ச்சிக் காலத்தினை நீட்டுவதில் கவனத்தினைச் செலுத்துகின்ற வேளையில் படுகடன் தீர்ப்பனவுச் செலவு நடுத்தர காலத்தில் குறைக்கப்படும். இதன்படி, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச படுகடன் நடுத்தர காலத்தில் 70 சதவீதத்திற்குக் கீழே வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 1.5 பிரச்சனைகளும் கொள்கைகளும்

**நீண்ட காலத்தில் கைத்தொழில் வளர்ச்சியை உயர்த்துவதற்காக, கைத்தொழில் கொள்கையானது பெறுமானச் சங்கிலியை உயர்த்தும் விதத்தில் தயாரிப்பினை நகர்த்துவதன் மீது கூடுதலான கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.** 1990இன் தொடக்கப் பகுதியிலிருந்து இலங்கையின் கைத்தொழில் மயப்படுத்தல் உபாயம் புடவைகள் மற்றும் ஆடைகள், மட்பாண்டம் மற்றும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தித் துறைகளிலுள்ள மென்கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதனை தலையாக நோக்கமாகக் கொண்டிருந்தது. எனினும், இரு தசாப்தங்களுக்கும் கூடுதலான காலத்தின் பின்னரும் கூட, இவ்வுற்பத்திகள் மொத்த கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு வகைகூறி நாட்டின் கைத்தொழில் அமைப்பில் இன்னமும் ஆதிக்கம் செலுத்துவனவாகவுள்ளன. மாறாக, பிராந்திய போட்டியாளர்கள் தமது தயாரிக்கப்பட்ட ஏற்றுமதிகளில் உயர் தொழில்நுட்ப உற்பத்தி ஏற்றுமதிகளின் பங்கினை 25 சதவீதத்தினை விஞ்சும் விதத்தில் கூடுதலான நவீனத்துவம் வாய்ந்த உற்பத்திகளைத் தயாரிக்கின்ற விதத்தில் சிறப்புத்

தேர்ச்சியை அடையும் முறையில் தமது கைத்தொழில்களை பன்முகப்படுத்தியிருப்பதுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் இது தொடர்பான பங்கு 1.5 சதவீதமேயாகும். ஆகவே, பெருமளவிற்குத் தாராளமயப்படுத்தப்பட்டுள்ள உலகளாவிய வர்த்தக அமைப்பில் கைத்தொழில் உற்பத்தி அபிவிருத்திச் செயன்முறைகள் தவளைப் பாய்ச்சலில் முன்னேறுவதற்கு இலங்கை உயர் தொழில்நுட்ப உற்பத்திகளின் தயாரிப்பினை வலுப்படுத்துவது அவசியமாகும். உயர்ந்த தொழில்நுட்பம் வாய்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதிகள் உயர்ந்த இலாபங்களுக்கு வழியமைப்பதனால் அது ஏற்றுமதி நாடுகளை குறைந்த அபிவிருத்தி நிலையிலிருந்து உயர்ந்த வருமான மட்டத்தினை அடைவதனை இயலச்செய்கிறது. இந்நோக்கத்திற்கு தொழில்நுட்பங்களை பின்பற்றுவதும் அதேபோன்று புத்தம் புதுவிடயங்களை அறிமுகப்படுத்துவதும் பொருத்தமான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் மூலம் உந்துசக்தியளிப்பதும் இன்றியமையாதனவாகும். தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் கைத்தொழில் மட்டங்களில் ஆராய்ச்சியையும் அபிவிருத்தியையும் ஊக்குவிப்பதற்குப் பல வழிமுறைகளை எடுத்திருந்த போதும் பாரிய ஏற்றுமதிச் சந்தைகளைக் கவர்ந்துகொள்ளும் வேளையில் பாரம்பரியமற்ற துறைகளில் தயாரிப்புத் தளத்தினை விரிவாக்கும் பொருட்டு நானோ தொழில்நுட்பம், உயிரினத் தொழில்நுட்பம் அதேபோன்று தகவல் தொழில்நுட்பம் என்பனவற்றின் பயன்பாட்டினை மேம்படுத்துவதற்கு கூடியளவு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். செயன்முறைகளுக்கு கொத்தணிகளை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் அபிவிருத்தி உபாயங்களைப் பின்பற்றுவதன் மூலம் அரசாங்கம் மேலும் ஆதரவினை வழங்கமுடியும். ஒரே மாதிரியான அல்லது பெரும்பாலும் ஒரே மாதிரியான உற்பத்திகளை உற்பத்தி செய்கின்ற தொழில்முயற்சிகளை புவியியல் ரீதியாக ஓரிடத்தில் ஒன்றுசேர்க்கின்ற இக்கொத்தணிகள் தகவல்களைப் பரப்புதல் தொழில்முயற்சிகளிடையே தொழிலாளர்கள் சிறப்புத் தேர்ச்சியினையும் தொழிற்பிரிப்பினையும் பெற்றுக்கொள்ளுதல், தேர்ச்சியடைந்த தொழிலாளர் சந்தைகளின் அபிவிருத்தி மற்றும் கொடுக்கல்வாங்கல் செலவுகளில் குறைப்புக்களை ஏற்படுத்தல் என்பன மூலம் செலவு அநுகூலங்களைக் கொண்டுள்ளன. அதேநேரம் ஒரு அமைவிடத்தில் கைத்தொழில்கள் குவிந்து காணப்படுவது வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதுடன் அவை நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் என்பன உட்பாயவும் நன்கமைந்த சந்தைகளை அணுகவும் வசதிகளை வழங்கும். மேலும், நாடுகள் அவற்றின் தொடர்பான செலவு அநுகூலங்களைப் பொறுத்து உற்பத்திச் செயன்முறைகளின் வேறுபட்ட பணிகளில் விசேடத் தேர்ச்சியைப் பெறுவதற்காக அந்நாடுகளுக்கு வாய்ப்புக்களை வழங்குகின்ற உலகளாவிய பெறுமதிச்சங்கிலியும் தேவையான கொள்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் மேம்படுத்திக் கொள்ளப்படக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்ததொரு துறையாகும். எனினும், கைத்தொழில் மயமாக்குதல் என்பது நீண்ட காலச் செயன்முறை என்பதனால், கைத்தொழில் துறைக்கு நீண்ட காலத் தொலைநோக்கு மற்றும் உபாயங்களை வழங்கும் பொருட்டு, நிலையான கைத்தொழில் கொள்கைகளைக் கொண்டிருப்பது இன்றியமையாததாகும்.

**பொருளாதாரத்தின் நீடித்த வலுவான வளர்ச்சி உத்வேகத்திற்குச் செழிப்புமிக்க ஏற்றுமதிச் செயலாற்றம் தவிர்க்கமுடியாததாகும்.** இலங்கையின் வணிக ஏற்றுமதிகள் பெயரளவு நியதிகளில் அதிகரித்துள்ளபோதும் மொ.உ.உற்பத்தியின் பங்காக ஏற்றுமதிகள் 2000 இன் 33.3 சதவீதத்திலிருந்து 2014இல் 14.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும், உலகின் ஏற்றுமதிப் பொருட்கள் உயர்வடைந்துள்ளமையினால், உலகளாவிய வணிக ஏற்றுமதிகளில் இலங்கையின் பங்கு 2000இன் 0.09 சதவீதத்திலிருந்து 2014இல் 0.06 இற்கு வீழ்ச்சியடைந்தது. உலக போட்டித்தன்மைச் சுட்டெண்ணில் இலங்கையின் தரநிலை 2013இன் 65 ஆவது நிலையிலிருந்து 2014இல் 78 இற்குக் குறைவடைந்து இலங்கை ஏற்றுமதிகளின் போட்டித்தன்மை தேய்வடைந்து போனமையினை எடுத்துக்காட்டியது. இலங்கையின் உள்நாட்டுச் சந்தையின் அளவையும் கொள்வனவு வலுவையும் கவனத்தில் கொள்கையில் நாட்டின் நடுத்தர கால வளர்ச்சி உத்வேகத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை எய்துவதற்கு ஏற்றுமதிச் சந்தை உபாயமொன்று முற்தேவைப்பாடாகக் காணப்படுகின்றது. கடந்த ஆண்டுகளில் ஏற்றுமதிகளில் நீண்ட காலத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பல காரணங்களை எடுத்துக்காட்ட முடியும். இப்பிராந்தியத்திலுள்ள அயல் பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் காணப்பட்ட அலகொன்றிற்கான வலுவின் உயர்ந்த செலவு உள்நாட்டுத் தயாரிப்பாளர்களின் உற்பத்திச் செலவினை அதிகரித்துள்ளது. இது இலங்கை ஏற்றுமதிகளின் போட்டித்தன்மைகளைக் குறைத்துவிட்டது. வரலாற்றில் பல்வேறு தடவைகளிலும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணியின் உயர்வு நாட்டின் வர்த்தகப் பங்காளர்களுடனான அதன் போட்டித்தன்மையினையும் அதன் மூலம் ஏற்றுமதி வளர்ச்சியையும் தளர்வுறச் செய்துவிட்டது. உற்பத்திகளின் குவிவும் இலங்கையின் ஏற்றுமதி அமைப்பிலுள்ள சந்தைச் சேரிடங்களும் ஏற்றுமதி வருவாய்களில் உறுதியற்றதன்மைகளுக்கும் வழியமைக்கலாம். இலங்கை தேயிலை, இறப்பர் மற்றும் ஆடைகள் போன்ற ஒரு சில ஏற்றுமதி உற்பத்திகளில் தங்கியிருக்கும் வேளையில் ஐரோப்பா மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற பாரம்பரியச் சந்தைகள் மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ

மூன்றில் இரண்டு பங்கிற்கு வகைகூறுகின்றன. பொருளாதார நடவடிக்கைகள் மேற்கு நாடுகளிலிருந்து இந்தியா மற்றும் சீனா ஆகியவற்றிற்குப் பெயரும் வேளையில் மேற்கு மற்றும் கிழக்கிலுள்ள இயற்கைவாற்றல்மிக்க பொருளாதாரங்களை நோக்கி தற்போது காணப்படுகின்ற பக்கச்சார்பான அதன் ஏற்றுமதி உபாயங்களை இலங்கை மீளபரிசீலிப்பது மிக முக்கியமானதாகும். இதைப் பொறுத்தவரையில் சீனாவுடனான உத்தேச வர்த்தக உடன்படிக்கை சரியான திசையை நோக்கி எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். ஏற்றுமதியின் பன்முகப்படுத்தல், கூடிய பெறுமதிகூட்டல்களுடனும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதுடனும் சேர்த்து உற்பத்திகளை நவீனமயப்படுத்துவதற்கு அதிகளவில் உதவும். சில ஆசியப் புலிகளின் விரைந்த கைத்தொழில் மயமாக்கல் செயற்பாடுகளின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டவாறு நாட்டின் தயாரிப்புத் தளத்தினை தைக்கப்பட்ட ஆடைகள் மற்றும் புடவைகள் என்பனவற்றிலிருந்து இலத்திரனியல் போன்ற உயர் தொழில்நுட்ப உற்பத்திகளுக்கு மாற்றுவதற்கு இதுவே சரியான நேரமாகும். மேலும், உலகளாவிய மற்றும் பிராந்திய ஏற்றுமதி மாநாடுகள், உபாய சந்தைப்படுத்தல்கள் மற்றும் இலக்கிடப்பட்ட நாடுகளுடன் இருபுடை மற்றும் பல்புடை வர்த்தக ஒப்பந்தங்களைத் தொடர்வது போன்ற வலுவான பங்கேற்புக்கள் இலங்கையின் ஏற்றுமதிச் சந்தையினை உலகிற்கு அதிகரித்தளவில் திறந்துவிடுவதனை இயலுமைப்படுத்தும். தொழில்முயற்சியாளர்களின் இயலாற்றலைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் ஏற்றுமதித் தூண்டலை நோக்கிய நகர்வில் வெற்றிகரமான சந்தை உபாயங்களுக்கும் தனியார் துறையின் பங்களிப்பு மிக இன்றியமையாததாகும். நுழைகின்ற சந்தைப்படுத்தலின் அனைத்துத் துறைகளிலும் அரச மற்றும் தனியார் துறையில் பன்முகப்படுத்தப்பட்ட இணைந்ததொரு அணுகுமுறை, உபாய அணிகளை உருவாக்குதல், முன்னேற்றம் கண்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் மற்றும் வலுவான உள்நாட்டு மற்றும் பன்னாட்டு புலமைச்சொத்து சட்டங்களினூடாக கண்டுபிடிப்புக்களைப் பாதுகாத்தல் என்பன ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். ஐரோப்பிய சந்தைக்குள் அதிகரித்தளவில் நுழைவதிலிருந்து கிடைக்கும் அதிகரித்த ஏற்றுமதிகளினூடாக எமது பொருளாதாரத்திற்கு கிடைக்கத்தக்கதாகவிருக்கும் நன்மைகளை பரிசீலனையில் கொள்கையில் ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்குள் நுழைவதற்கு முன்னுரிமையை வழங்குகின்ற பொதுவாக்கப்பட்ட சிறப்பு முன்னுரிமை + திட்டத்திற்குள் மீளநுழைவதற்கான அண்மைய முயற்சிகள் பாராட்டத்தக்கனவாகும்.

**பணிகள் துறையின் வளர்ச்சியின் உள்ளார்ந்த தன்மையைப் பயன்படுத்திக் கொள்வது எதிர்காலப் பொருளாதார வளர்ச்சியைப் பேணுவதற்கு தவிர்க்கமுடியாததொரு பகுதியாக விளங்கும்.** இலங்கையின் பொருளாதாரத்தில் பணிகள் துறையின் முக்கியத்துவம் கடந்த காலப்பகுதியில் உறுதியாக அதிகரித்ததன் மூலம் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அதன் பங்கு 2014இல் 57.6 சதவீதத்தைப் பதிவு செய்தது. கடந்த ஆண்டுகளில் பணிகள் துறையின் தன்மை குறிப்பாக சந்தை தாராளமயமாக்கல் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் சிறியளவு சில்லறைப் பணிகளிலிருந்து நிதியியல் பணிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற உயர்ந்த தேர்ச்சி கொண்டதும் உயர்ந்த பெறுமதிகூட்டப்பட்டதுமான நடவடிக்கைகளுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு மாற்றமடைந்துவருமொரு தன்மைக்குள்ளாகியிருக்கிறது. நாடு முழுவதிலும் இடம்பெற்றுவரும் விரைந்த வேகத்தில் அபிவிருத்தியடைந்து வருகின்ற உட்கட்டமைப்புக்களின் காரணமாக பணிகள் துறையின் பங்கு இன்னமும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. உலகளாவிய ரீதியில் பணிகள் சாதனங்கள் வர்த்தகப்படுத்தத்தக்கனவாகவும் ஏற்றுமதி செய்யத்தக்கனவாகவும் மாறிவருவதன் காரணமாக கடந்த தசாப்த காலத்தில் பணிகள் துறையின் முக்கியத்துவம் வளர்ச்சியடைந்திருக்கிறது. ஆகவே, உலகளாவிய வர்த்தகத்தின் பரிமாணங்கள் தயாரிப்புத் துறையின் போட்டித்தன்மையான அநுகூலங்களிலிருந்து தோற்றம்பெற்றுவரும் நாடுகளினால் பெறுமதி கூடியளவில் சிறிய சந்தைகளை கண்டறிவதற்கான பணிகளுக்கு மாற்றமடைந்திருக்கிறது. ஆகவே, உலகளாவிய கேள்வியை பேணிக் கொள்வதற்கு தற்பொழுதுள்ள பணிகளின் அமைப்பினை தீவிரமான வர்த்தகப்படுத்தத்தக்க பணிகள் துறைக்கு மாற்றிக்கொள்வதற்கான முன்கூட்டிய ஆயத்த வழிமுறைகளைக் கண்டறிவது மிக அவசியமாகும். இது தொடர்பில், துறைமுகம் மற்றும் வானூர்திநிலையம் தொடர்பான நடவடிக்கைகள் சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப இயலுமைப்படுத்தப்பட்ட பணிகள் போன்ற துறைகளில் கடந்த ஒரு சில தசாப்தங்களாக சாதகமான கொள்கை முன்னெடுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான பரிமாற்றல் செயன்முறைகளை நவீன தகவல் தொழில்நுட்ப மேடைகள், காத்திரமான தொலைத்தொடர்பூட்டல் பணிகள், மின்வலு மற்றும் உயர்தர மனித மூலதனம் போன்ற உள்ளீடுகளின் தடங்கலற்றதும் மற்றும் தொடர்ச்சியானதுமான வழங்கல் என்பனவற்றை உள்ளடக்கிய பொருத்தமான உதவி அமைப்புக்களினூடாக மேலும் ஊக்குவிக்கமுடியும். இது தொடர்பில், உலகின் மிகப்பிந்திய தொழில்நுட்பங்களையும் மிக அண்மைய இற்றைப்படுத்தப்பட்ட அறிவுடன் கூடிய அலுவலர்களையும் கிடைக்கச்செய்வது மட்டுமன்றி மிகப் பாரிய மூலதனங்களும் தேவைப்படுகின்றன. ஒட்டுமொத்தப் பணிகளின் வழங்கல் மற்றும் தரம் என்பனவற்றுடன் கைத்தொழில் நேரடியாகத் தொடர்புபடுவதனால் அதன் நெகிழ்ச்சித்தன்மை

போன்ற வசதிகளை நோக்கி ஒட்டுமொத்தக் கொள்கைகளை நிர்ணயிப்பது விரைவுபடுத்தப்படல் வேண்டும். அத்தகைய வசதிப்படுத்தும் சூழ்நிலைகள் நடுத்தர காலப்பகுதியில் நாடு அதனது எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சிப்பாதையில் தொடர்வதற்கு உதவிப்படுத்தும்.

**நீண்ட கால நிதியிடல் போதுமானளவில் கிடைப்பதனை உறுதிப்படுத்துவதற்காக பாரம்பரியமான வங்கியை அடிப்படையாகக் கொண்ட நிதியிடலில் முக்கியமாகத் தங்கியிருப்பதிலும் பார்க்க முதலீடு மற்றும் வலுவான பொருளாதார வளர்ச்சி என்பனவற்றிற்கான இன்றியமைாத மூலமாக விளங்கும் சந்தையை அடிப்படையாகக் கொண்ட மாற்று நிதியிடல் முறைகளை மேம்படுத்துவதன் மீது கவனம் செலுத்துவது முக்கியமானதாகும்.** தற்பொழுது, உள்நாட்டு வங்கித்தொழில் துறை, கம்பனித் துறை அதுபோன்று சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி என்பனவற்றிற்கான முக்கிய நிதியிடல் மூலமாக தொடர்ந்தும் விளங்குவதுடன் மூலதனச் சந்தைகளினூடாகப் பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்காக நிதிகளைத் திரட்டிக் கொள்வது பாரிய கம்பனிகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இருப்பினும் கூட, நிதியியல் இடையேற்பாடுகளுடன் சேர்ந்த பல்வேறு பிரச்சனைகளின் காரணமாக, குறிப்பாக, உயர்ந்த இடையேற்பாட்டுச் செலவுகள் அதேபோன்று கணக்காய்வு மற்றும் கொடுக்கல்வாங்கல் செலவுகளின் காரணமாக வங்கியினை அடிப்படையாகக் கொண்ட நிதியிடல் மாதிரியின் பாரம்பரிய முறையினை நீண்ட கால நிதியிடலுக்கேற்றவிதத்தில் மாற்றிக் கொள்வது சாத்தியமற்றதாகவுள்ளது. மேலும், உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளின் காரணமாக வங்கித்தொழில் துறை குறிப்பிடத்தக்க வழங்கல் செயல்முறைகளுக்குள்ளாவதனால் அது உலகெங்கிலுமுள்ள பொருளாதாரங்களின் நீண்ட கால நிதியிடலுக்கான கேள்வி மற்றும் வழங்கல்களிடையேயான இடைவெளியை அதிகரித்திருக்கிறது. மாறாக பல நாடுகளின் அனுபவங்கள் சந்தையை அடிப்படையாகக் கொண்ட நிதியிடல் முறைமைகள், வங்கி அடிப்படையிலான பாரம்பரிய நிதியியல் இடையேற்பாடுகளுடன் தொடர்புபட்ட இயல்பான வினைத்திறனின்மையை குறைக்குமென்பதனை எடுத்துக்காட்டுகின்றன. இது, இலங்கையின் பின்னணியில், குறிப்பாக மூலதனச் சந்தைகளினூடாக நீண்ட கால நிதியிடலுக்காக ஆழமானதும் திரவத்தன்மை மற்றும் வெளிப்படையான தன்மைகளையும் கொண்ட சந்தைகள் ஊக்கவிக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்ற வேளையில் பாரம்பரிய வங்கித்தொழில் முறைமையானது பொருளாதாரத்தில் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் மைய வங்கித்தொழில் தொழிற்பாடுகளுக்கான வினைத்திறன்மிக்க ஏற்பாட்டாளர்கள் என்ற வகிபாகத்தினை கவனத்தில் கொண்டு பாரம்பரிய வங்கித்தொழில் முறைமை ஊக்குவிக்கப்படுகிறது. எனவே, நடுத்தர காலத்தில் நாடு ஆழமானதும் பரந்ததுமான கம்பனிப் படுகடன் சந்தைகளை அபிவிருத்தி செய்வதன் மீது கூடுதலான கவனத்தினைச் செலுத்துகின்ற அதேவேளையில் பங்குரிமைச் சந்தைகளை மேலும் ஆழமாக்குதலும் வேண்டும். மேலும், முதலீடுகளை பன்முகப்படுத்துவதனூடாக புதிய முதலீட்டாளர்களை கவர்வதன் மூலம் நடுத்தர காலத்தில் துணிகர மூலதன சந்தையினை அபிவிருத்தி செய்வது நிதியியல் சந்தைகளை ஆழமாக்குவதற்கு மேலும் அநுகூலமானதாகவிருக்கும். அத்தகைய சந்தைகள் கணிசமான வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவரும். இது புத்தம்புதிய தன்மைகள், மேம்பாட்ட முகாமைத்துவ முறைமைகள், ஆளுகை நடைமுறைகள், உயர் நியமங்கள் அதேபோன்று உள்ளூர் கம்பனிகளுக்கான புதிய சந்தைகளைப் பெற்றுக்கொள்ளுதல் போன்றவற்றைக் கொண்டுவரும். அபிவிருத்தியடைந்த மற்றும் தோற்றம்பெற்றுவரும் சந்தைகளிலுள்ள மூலதனச் சந்தை தீர்வுகளின் அண்மைய உதாரணங்கள் மட்டுப்படுத்தப்பட்ட கொடுகடன் கிடைப்பனவு அதேபோன்று வங்கிகளின் அதிகளவிலான ஒழுங்குவிதிகள் என்பனவற்றின் காரணமாக கடுமையான நிதியியல் தடைகளை மிக மோசமாக எதிர்நோக்கிய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் வளர்ச்சிக்கு நீண்ட கால நிதியிடலுக்காக சந்தையை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்குகள் பங்களித்திருப்பதனை எடுத்துக்காட்டுகின்றன.

**நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தி உபாயத்துடன் சேர்ந்து செல்லும் விதத்தில் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சித் துறையினை தரமுயர்த்துவதற்கு விசேட கவனம் தேவைப்படுகிறது.** வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் துறையினை உள்ளடக்கிய ஆற்றல்வாய்ந்ததும் இயக்கவாற்றல் கொண்டதுமான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறை, தொழில்நிலையை உருவாக்குதல், வருமானத்தை உருவாக்குதல், வறுமையை ஒழித்தல் என்பனவற்றின் மூலம் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சிக்கு உதவுவதன் மூலம் பொருளாதாரத்தில் மிக முக்கியமானதொரு பங்கினையாற்றுகிறது. எனினும், இலங்கையில் உற்பத்தி அதேபோன்று காரணிச் சந்தைகள் என்பனவற்றில் காணப்படும் பல தடைகளின் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் முழுமையான உள்ளார்ந்த வளத்தினை இன்னமும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நிதியிடலைப் போதுமானளவிற்குப் பெற்றுக்கொள்ள முடியாமை, மனிதவள இயலாற்றல் போதுமானளவு இல்லாமை மற்றும் தொழில்நுட்பவியல் இயலாற்றல் போதுமானளவு இல்லாமை என்பன சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையின்

வளர்ச்சிக்கான தடைகள் மேலும் வலுப்படுத்துகிறது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அவற்றின் உற்பத்தி இயலாற்றலை கட்டியெழுப்புவதற்கான அவற்றின் முயற்சியைத் தொடர்வதற்கு நிதியியல் வசதிகளை வழங்குவது மிக இன்றியமையாதது என்பதனைத் தொடர்ந்துவந்த அரசாங்கங்கள் அடையாளம் கண்டதன் காரணமாக பல சலுகைக் கடன்களும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளபோதும் நிதியிடலில் பற்றாக்குறையாகக் காணப்படும் தன்மை இன்னமும் கணிசமானளவில் காணப்படுவதுடன் இத்துறையில் சவால்களும் விடாப்படியாகவே காணப்படுகின்றன. இப்பின்னணியில் இத்துறைக்கான நிதியின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவதற்காக மீட்பு வழிமுறைகளை அறிமுகப்படுத்துவது மிக இன்றியமையாததாகும். கிடைக்கத்தக்க கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களுடன் சேர்த்து கொடுகடன் மதியுரைகளையும் ஆலோசனைப் பணிகளையும் வழங்குவது நிதிகள் எவ்வாறு பயன்படுத்தப்படுவது மற்றும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளின் நிதியியல் ஒழுங்குகள் என்பனவற்றை உயர்த்துவதற்கு இன்றியமையாதனவாகும். வியாபார அபிவிருத்திப் பணிகள் இது தொடர்பில் முக்கியமான வகிபாகத்தினை ஆற்றமுடியுமென்பதனால் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் வியாபார அபிவிருத்திப் பணிகளின் செயற்பரப்பு தொழிற்பாடு என்பனவற்றை அதிகரிப்பது அதிகளவிற்கு முக்கியம் வாய்ந்ததாகும். மேலும், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையின் தொழில்நுட்ப இயலாற்றலை அதிகரிப்பதற்கு அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்வதற்கும் மற்றும் வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் மேம்படுத்துவதற்கும் அதன் மூலம் அவை பொருளாதாரச் சிக்கனங்களை எய்துவதனை இயலச்செய்வதற்கு கைத்தொழில் கொத்தணிகளை ஏற்படுத்துவது ஊக்குவிக்கப்படல் வேண்டும். மேலும், இது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் பாரிய தொழில்முயற்சிகளுடன் இணைப்புக்களை ஏற்படுத்திக்கொள்ள வசதியளிக்கும். இது, அவர்கள் பாரிய வழங்கல் சங்கிலிகளுடன் இணைந்து கொள்வதற்கான வாய்ப்புக்களையும் வழங்கும். மேலும், அத்தகைய இணைப்புக்கள் தற்பொழுது உள்நாட்டுச் சந்தைகளில் பெருமளவிற்குத் தங்கியிருக்கும் சிறிய மற்றும் தொழில்முயற்சிகள் ஏற்றுமதி உள்ளார்ந்த வளத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும் வசதியளிக்கக்கூடும்.

**படுகடனை உருவாக்காத வெளிநாட்டு முதலீடுகளின் பாய்ச்சலைக் கவரும் நோக்குடன் சாதகமான வியாபாரம் செய்யும் சூழலை உறுதிப்படுத்தும் விதத்தில் நிலையான கொள்கையைப் பேணுவது இலங்கைக்கு மிக முக்கியமானதாகும்.** மோதலுக்குப் பின்னைய காலப்பகுதியில் பேரண்டப் பொருளாதார அடிப்படைகளிலும் உட்கட்டமைப்பு வசதிகளிலும் மேம்பாடு காணப்பட்ட போதிலும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை எதிர்பார்க்கப்பட்ட உயர்ந்த மட்டங்களில் கவர்வதற்கு இலங்கை தவறிவிட்டது. வெளிநாட்டு நேரடி முதலீடுகள் வலுவான மற்றும் உயர்ந்த பொருளாதார வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணுவதற்கும் அதேவேளையில் சேமிப்பு முதலீட்டு இடைவெளியை நிதியிடுவதற்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். எதிர்கணியமான சேமிப்பு முதலீட்டு இடைவெளியினை ஒன்றில் கடன்பாடுகள் வடிவில் அல்லது வெளிநாட்டு முதலீடுகள் வடிவில் வெளிநாட்டு மூலவளங்களினூடாக நிதியிடுதல் வேண்டும். சேமிப்பு முதலீட்டு இடைவெளியினை கடன்பாடுகள் மற்றும் குறுங்கால முதலீடுகளினூடாக நிதியிடுவது செலவுமிக்கதாகவுள்ள வேளையில் அதேவேளையில் வெளிநாட்டு பாதிப்புக்களுக்கு நாடு உள்ளாகும் தன்மையினையும் அதிகரிக்கிறது. ஆகவே, சேமிப்பு முதலீட்டு இடைவெளியினை நிதியிடுவதற்கு படுகடனை உருவாக்காத வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை அதிகரிக்கும் தேவை காணப்படுகிறது. மேலும், வெளிநாட்டு நேரடி முதலீடுகள், முன்னேற்றம் கண்ட தொழில்நுட்பம், தொழில்முயற்சியாண்மை நடைமுறைகள், உத்தரவாதமளிக்கப்பட்ட பன்னாட்டுச் சந்தைகளை அடையும் தன்மை, அதிகரித்த தொழில் வாய்ப்பு என்பனவற்றைக் கொண்டு வருகின்றன. எனவே, சந்தை சார்ந்த கொள்கைகள் வியாபார நம்பிக்கையைப் பேணி வளர்த்து முதலீடுகள் உயர்வடைய வழிவகுக்கும். இது, நாட்டிற்குள் உயர்ந்தளவு வெளிநாட்டு நேரடி முதலீடுகள் உட்பாய்வதனை இயலச்செய்யும். உயர் வளர்ச்சி, தாழ்ந்த மற்றும் உறுதியான பணவீக்கம் போன்ற ஆரோக்கியமான பொருளாதாரக் குறிகாட்டிகளுக்குப் புறம்பாக சிறந்த ஆளுகை மற்றும் சொத்துரிமைகளுக்கான உத்தரவாதம் அதேபோன்று தனியார் துறை வியாபாரங்களை வசதிப்படுத்துவதற்கான வினைத்திறனான அரசாங்கத்தின் பணிகள் என்பனவும் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும். சொத்து உரிமைகள் மீதான சட்டவாக்கங்களின் நிச்சயமற்ற தன்மை மற்றும் இறங்குமுக வரிக் கொள்கைகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்கம் குன்றச்செய்யக்கூடிய பொறிமுறைகளை நடைமுறைக்கிடுதல் போன்ற முரண்பாடான கொள்கைகளை தவிர்ப்பதற்கு நுணுக்கமான கவனிப்புக்கள் தேவைப்படுகின்றன. அதேவேளை, முன்னேற்றம் கண்ட தொழில்நுட்பங்கள் மற்றும் மனித மூலதன அபிவிருத்திகளில் உள்நாட்டு மூலதனங்களை அதிகரிப்பது இலங்கைக்கு அவசியமாகும். அதிகரித்த கடப்பாடுகளும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதும் அரசாங்கத்தின் வகிபாகத்தினை அங்கீகரிப்பதும் தொழிலாளர் சந்தையின் சீர்திருத்தங்களை அதிகரிப்பதற்கு மிகத் தேவையாகவுள்ளன. இது ஆட்சேர்ப்பதும் தொழிலாளர்களைப் பணியிலிருந்து நிறுவத்துவதற்கும்

கூடுதலான நெகிழ்ச்சித்தன்மையினை வழங்குவதுடன் வியாபாரம் செய்யும் தரமிடலை மேம்படுத்தவும் முதலீடுகளைக் கவரும் நாடொன்றாக அதன் தோற்றப்பாட்டினை உயர்த்தவும் உதவும்.

**இறைத் துறையில் அண்மையில் காணப்பட்ட வழுக்கல்கள், வரி அரசிறைச் சேகரிப்புகளை அதிகரிப்பதற்கும் அரச செலவினத்தை மேலும் திரட்சிப்படுத்துவதற்கும் தீவிரமான முயற்சிகள் அவசியம் என்பதனை எடுத்துக்காட்டின.** 1978இல் மொ.உ.உற்பத்தியின் 27.4 சதவீதமாக விளங்கிய மொத்த அரச அரசிறை 2000ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 16.8 சதவீதத்திற்கும் 2014இல் மொ.உ.உற்பத்தியின் 12.2 சதவீதத்திற்கும் படிப்படியாக வீழ்ச்சியடைந்தன. வரி முறைமைகளை இலகுபடுத்துவதற்கு பல வழிமுறைகள் பின்பற்றப்பட்ட போதும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரி அரசிறைச் சேகரிப்பு கடந்த ஆண்டுகளில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. வரி அரசிறை 1978இன் மொ.உ.உற்பத்தியின் 24.2 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 14.5 சதவீத்திற்கும் 2014ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 10.7 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. இது இறைத்துறையின் செயலாற்றத்திற்கான சவால்களை அதிகரிக்குமென்பதனால் நடுத்தர கால கட்டமைப்பொன்றினூடாக இப்பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு தீர்க்கமான வழிமுறைகள் அவசியமாகும். இது தொடர்பில், கவனம் செலுத்தப்பட வேண்டிய சில துறைகளாக வரி முறைமையினை மேலும் இலகுபடுத்தல், நேரடி வரி விதிப்பினை மேம்படுத்தல், மற்றும் வரி விலக்கல்களைக் குறைத்தல் என்பனவற்றின் மூலம் வரித் தளத்தினை விரிவாக்குதல் மற்றும் வரி நிருவாகத்தினை வலுப்படுத்தல் என்பன காணப்படுகின்றன. அரச செலவினத்தைக் குறைப்பதனைப் பொறுத்தவரையில் பல துறைகளுக்கும் மேலோட்டமான முறையில் வழங்கப்பட்ட உதவுதொகைகள் போன்ற அரச நலன்புரி வழிமுறைகள் இறைச் சுமையினை ஏற்படுத்துவதனால் அவை உடனடியாக மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். மேலும், திருத்தப்பட்டவாறான 2003ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க இறை முகாமைத்துவ பொறுப்பாண்மைச் சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எய்துவது மிக இன்றியமையாததாகும். இது தொடர்பில், மிகையான மேந்தலைச் செலவுகளைக் கட்டுப்படுத்தவும் வெளிப்படையான தன்மையினையும் பொறுப்புக்கூறும் தன்மையினையை அதிகரிப்பதற்கும் அரசாங்கத்தினால் தெரிவிக்கப்பட்ட நோக்கங்கள் பாராட்டப்படக்கூடியனவாக இருப்பதுடன் அத்தகைய நடைமுறைகளைப் பேணுவது பொருளாதாரத்திற்கு சாதகமான சமிக்ஞைகளை அனுப்பும் என்பதுடன் முதலீட்டாளர் நம்பிக்கையையும் உத்வேகப்படுத்தும். அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகள் தொடர்பில் எதிர்பார்க்கப்பட்டவாறு விலையினை அடிப்படையாகக் கொண்ட சூத்திரமொன்றினை நடைமுறைக்கிடுதல், எதிர்கால உலகளாவிய விலைத் தளம்பல்களின் பேரண்டப் பொருளாதாரம் மற்றும் இறைத் தாக்கங்களையும் குறைக்கும். இவ்வழிமுறைகள் இறைத்திரட்சியை வலுப்படுத்தி மொ.உ.உற்பத்திக்கான அரச படுகடன் விகிதம் மேலும் குறைவடைய வழிவகுக்கும். இது வீழ்ச்சியடைந்து செல்லுமொன்றாகக் காணப்பட்ட போதும் அயல் பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில் இன்னமும் உயர்வானதாகவே காணப்படுகிறது.

**இலங்கையில் உயர் கல்வித் துறையினை மாற்றியமைப்பதற்கு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கிடையிலும் வலுவான பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்குத் தேவையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பெறுபேறுகள் உயர்மட்டத்தில் காணப்படாமையானது சவாலுக்குரியதாகக் காணப்படுகிறது.** உலகளாவிய வர்த்தகம் மற்றும் பணிகளில் போட்டித்தன்மை மிக்க மட்டமொன்றினை எய்துவதனை நோக்கிய இலங்கையின் உயர் கல்வியிலிருந்து எதிர்பார்க்கப்படும் அநுகூலங்களை வழங்குவதற்கேற்ற எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களை அடைவதற்கு பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றுடன் இணைந்த உயர் கல்வி நிறுவனங்கள் ஆராய்ச்சிகளை வெளிப்படுத்த தவறிவிட்டன. இலங்கைப் பல்கலைக்கழகங்கள் இப்பிராந்தியத்திலுள்ள மற்றைய பல்கலைக்கழகங்களுக்கு கீழேயே தொடர்ந்தும் தரமிடப்பட்டு வருகின்றன. உலக வங்கியினால் வெளியிடப்பட்ட 2014ஆம் ஆண்டிற்கான உலக அபிவிருத்திக் குறிகாட்டிகளின்படி, வதியும் இலங்கையர்களினால் ஆக்கவுரிமைக்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களானது அவற்றின் பிராந்திய நாடுகளின் விண்ணப்பங்களில் ஒரு சிறு பின்னமாகவே தொடர்ந்தும் காணப்படுகிறது. இவை உயர் கல்வி அதிகாரிகளின் ஒருங்கிணைந்த முயற்சிகளினூடாக ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் வலுப்படுத்தப்பட வேண்டுமென்பதனை எடுத்துக்காட்டுவனவாகவுள்ளன. இது பல்கலைக்கழக அமைப்பினை தற்போதைய மாதிரிகளிலிருந்து பல்கலைக்கழகங்கள் தாமாகவே தீர்மானங்களை மேற்கொள்ளும் சுய-வலுவூட்டல் மாதிரிக்கு மாற்றியமைப்பதனை தேவைப்படுத்தக்கூடும். அதேவேளையில், புதிய விடயங்களின் அடிப்படையில் கைத்தொழில் மற்றும் கல்விசார் துறைகளுக்கிடையே நிறுவன ரீதியான இணைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. பல்கலைக்கழகங்களுக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் உட்பட கைத்தொழில்களுக்குமிடையிலான உருவாக்கப்பட்ட தொழில்நுட்ப மாற்றல்களை பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளுக்கும் விரிவாக்க முடியும். இது தொடர்பில் தனியார் துறையினர் பல்கலைக்கழகங்களுடன் பொருத்தமான இணைப்புக்களை அபிவிருத்தி செய்வதனூடாக முக்கியமானதொரு வகிபாகத்தினையாற்ற முடியும். இது இறுதியில் தொழில்முயற்சிகள் அவற்றின் உலகளாவிய

சந்தைப் பங்குகளை விரிவாக்குவதற்கு உதவும். இலங்கை தேசிய விஞ்ஞான நிறுவகத்திற்கும் பல பாரிய கம்பனிகளுக்குமிடையிலான கூட்டு துணிகர முயற்சியான இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவகம் நாட்டில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியிலுள்ள மிகத் தேவையான இடைவெளியினை நிரப்புவதற்கான விஞ்ஞானம் புத்தம் புதுமைகளுக்கும் கைத்தொழில் இணைப்புக்களுக்குச் சிறந்ததொரு உதாரணமாகும்.

**நாட்டின் மாற்றடைந்துவரும் குடித்தொகையியல் தோற்றப்பாடு தொழிலாளர் சந்தையில் தற்பொழுது காணப்படும் பிரச்சனைகளுக்கு புதிய பரிமாணங்களைச் சேர்த்திருப்பது உயர் வளர்ச்சி உத்வேகத்திற்கு தாக்குப்பிடிப்பதற்கு எதிர்கால முன்னோக்கிய சீர்திருத்தங்களைத் தேவைப்படுத்துகின்றது.** மெதுவான குடித்தொகை வளர்ச்சி வயது முதிர்ந்த குடித்தொகையுடன் சேர்ந்து தொழிற்படையில் சுருக்கமொன்றினைத் தோற்றுவித்திருக்கிறது.பன்னாட்டு தொழிலாளர் அமைப்பின் மதிப்பீடுகளின் அடிப்படையில் 2009-2020 இற்கிடையிலான தொழிற்படையின் சராசரி வளர்ச்சி 1990-2006 காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட ஆண்டொன்றிற்கான ஒரு சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ 0.3 சதவீதமாகவிருக்கும். இப்பிரச்சனையைக் கட்டுப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படக்கூடிய உபாயங்கள் தொழிற்படை பங்கேற்பு விகிதத்தினை அதிகரித்தல், தொழிலாளர் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. தொழிற்படையை அதிகரிப்பதற்கு இளைஞர் மற்றும் பெண்களின் உயர்ந்தளவு பங்களிப்பு அவசியமாகும். இளைஞர் பங்கேற்பினை அதிகரிக்கும் பொருட்டு சந்தைத் தேவைப்பாடுகளுக்கு தேவையான தேர்ச்சியுடன் காத்திரமான தொழிற்படையொன்றை உருவாக்குவதற்கு நாட்டின் கல்வி முறைமையினை மீளவமைக்கும் கொள்கைகள் வலுப்படுத்தப்படுதல் வேண்டும். அரச துறை தொழில்நிலையைப் பெறுவதற்கு மிகச் சாதகமாகவிருக்கும் இளைஞர்களின் தொழில் தொடர்பான மனோபாவத்தினை மாற்றுவது அவசியமாகும். பெண்களை தொழிலாளர் சந்தைக்குள் கவர்வதற்கு நெகிழ்ச்சித்தன்மை கொண்ட வேலைநேரங்கள், வேலை நிலைமைகளை மேம்படுத்தல், குறுங்கால மற்றும் பகுதிநேர தொழில் வாய்ப்புக்களின் கிடைப்பினவை அதிகரித்தல் மற்றும் சட்டவாக்கச் சீர்த்திருத்தங்கள் என்பன அவசியமாகவுள்ள அதேவேளையில் பெண்களுக்கு சமமான தொழில் வாய்ப்புக்களை உறுதிப்படுத்துதல் வேண்டும். தொழிலாளர் உற்பத்தித்திறனை அதிகரிப்பது தொடர்பில் வேளாண்மைத் துறை மற்றும் அரச துறையில் கூடுதலான கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். நீர்ப்பாசன வலையமைப்பு மின்வலு மற்றும் வீதிகள் அதேபோன்று மனித மூலதனம் போன்ற பகுதி மூலதனத்திலான முதலீடுகள் தொழிலாளர் உற்பத்தித்திறனை ஓரளவிற்கு மேம்படுத்துவதற்கு வசதியளிக்கும். இவற்றிற்கு, வினைத்திறன்மிக்க மூலவள ஒதுக்கிற்காகத் தேவைப்படும் நெகிழ்ச்சித்தன்மையை வழங்குகின்ற காணி மற்றும் தொழிற்சந்தைச் சீர்திருத்தங்கள் மூலம் உதவியளிக்கப்படல் வேண்டும். மேலும், தொழிற்படையின் பங்களிப்பினை உச்சப்படுத்தும் பொருட்டு ஊதியத்தின் அதிகரிப்புக்கள் உற்பத்தித்திறனுடன் இணைக்கப்படுதல் வேண்டும். மேலும், வெளிநாட்டு தொழில் வாய்ப்பு அமைப்பில் சில சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் தேர்ச்சி, பால் மற்றும் பிரதேச செறிவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக் கொள்கைகளை மீளாய்வு செய்வது அவசியமாகும். வயது முதிர்ந்த குடித்தொகைப் பிரச்சனைகளை அனுபவிக்கின்ற ஏனைய நாடுகளின் உதாரணங்களைப் பின்பற்றி தற்போதைய ஓய்வுபெறும் குறித்துரைக்கப்பட்ட வயதினை மீளாய்வு செய்வது அவசியம்.

**அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டவாறு, சிறந்த ஆளுகை மற்றும் வெளிப்படையான தன்மை தொடர்பான கொள்கைகள் ஏற்றத்தாழ்வற்ற பொருளாதார அபிவிருத்திச் செயன்முறைகளுக்கு முக்கியமான ஊக்கியாக விளங்குவதனால் இதனை ஊக்குவித்தல் வேண்டும்.** சிறந்த ஆளுகை மற்றும் வெளிப்படையான தன்மை என்பன பொருளாதார நடவடிக்கையினை அதிகரிக்கக்கூடிய பணிகளை வழங்குகின்ற இயலாற்றல் கொண்ட தூண்டுதலளிக்கும் சூழலைப் பேணுதல் வேண்டும். இதுவும் சுதந்திரமான, நியாயமான மற்றும் சமாதானம் நிரம்பிய சமூகமொன்றை உருவாக்குகின்ற வேளையில் அரச நிறுவனங்கள் வெளிப்படையான முறையொன்றில் அவர்களது பொறுப்புக்களை ஆற்றுவதற்கு ஊக்குவிக்கப்படுவது நாட்டின் ஆளுகை முறைமைகள் மீதான நம்பிக்கையினை உறுதிப்படுத்துகிறது. அத்தகைய முறைமையானது, உயர்ந்தளவு பொருளாதார நன்மைகள் மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சி என்பன உட்பட சாதகமான சமூக நன்மைகளை விளைவிக்கும். சிறந்த ஆளுகை அம்சங்களை உள்ளடக்கியிருக்கும் உலகளாவிய குறிகாட்டிகளுக்கு முதலீட்டாளர்களினால் தெரிவிக்கப்பட்ட முக்கியத்துவத்தின் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு இக்கொள்கைகள் பொருளாதாரச் செயலாற்றத்தின் மீது, குறிப்பாக, வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்கின்ற நியதிகளில் சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன.